பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 04 சனிக்கிழமை (16-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:83

# பயண அனுமதி முறை குடாநாட்டிலும் நீக்கம்!

## நேற்று முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம்,பெப்ரவரி16

**யாழ்.மாவட்டத்தில் இருந்து விமானம் மற்றும் கப்பல் மூலம் வெளியிடங்களுக்குச் செல்வோர் பாதுகாப்பு அனுமதி பெறும் (MOD) நடைமுறை நேற்றுமுதல் நீக்கப்பட்டிருப்பதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்திருக்கிறது.**

பயணப் பாதுகாப்பு அனுமதி முறை நீக்கப்பட்டிருப்பதை அடுத்து பயணிகள் இனிமேல் தமது அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்து, பயணச் சீட்டுக்களைக் கொள்வனவு

(12 ஆம் பக்கம் பார்க்க)


## சிப்பாயை காணவில்லை

கொழும்பு,பெப்.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கடந்த 9 ஆம் திகதி காணாமற்போயுள்ளார் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

சுகயீனமடைந்திருந்த தனது மனைவியைப் பார்ப்பதற்காக விடுமுறை பெற்றுச் சென்ற இந்தச் சிப்பாய் பின்னர் காணாமற்போயுள்ளார். (ஐ-3)

## ஆப்கான் அமைச்சர் அடித்துக் கொலை!



**ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அப்துல் ரஹ்மான் அடித்துக் கொலைசெய்யப் பட்டிருக்கிறார்.**

**புனித ஹஜ் கடமைக்காக சவூதி செல்வதற்கு விமானத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த யாத்திரிகர்கள் விமான சேவை ரத்துச்செய்யப்பட்டதால் ஆத்திரமடைந்து அமைச்சரைக் கண்டபடி தாக்கிக் கொன்றுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**கொல்லப்பட்ட அமைச்சரையும் ஆத்திரமுற்ற யாத்திரிகர் கும்பலையும் படத்தில் காணலாம்.** *(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)* (ஐ)

# கண்டி வீதியும் உயிலங்குளம் பாதையும் நேற்று வைபவரீதியாகத் திறக்கப்பட்டன!

வவுனியா,பெப்.16

சமாதானப் பேச்சுக்கான நல்லெண்ண சூழ்நிலையை ஏற்படுத்தும் மற்றொரு நடவடிக்கையாக வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான இரு போக்குவரத்துப் பாதைகள் நேற்று வைபவரீதியாகத் திறக்கப்பட்டன.

ஏ-9 கண்டி நெடுஞ்சாலை, மன்னார் - உயிலங்குளம் வீதி ஆகிய இரு பாதைகளுமே நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

கண்டி வீதி திறப்பு வைபவம் நேற்றுக்காலை நடைபெற்றது. கண்டி வீதியில் ஓமந்தை விளக்கு வைத்த குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த படையினரின் சோதனை நிலையத்தைத் தாண்டி சுமார் 700 பேர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

முன்னதாக அவர்களது ஆளடையாளங்களைப் படையினர் சோதனையிட்டனர். இந்த வைபவத்தை நேரில் பார்வையிடுவதற்காக அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, நூர்டீன மசூர், ஆர்.ஏ.டி.சிறிசேன ஆகியோர் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல சகிதம் விளக்குவைத்தகுளம் பகுதிக்கு வந்திருந்தனர். வவுனியா அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் அரச அதிகாரிகள், படை அதிகாரிகள் பலரும் அங்கு கூடியிருந்தனர்.



தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பயணிகளின் வரவை எதிர்பார்த்துக் காத்துநின்ற போராளிகள்.

கண்டி வீதியின் வடக்கே புலிகளின் பக்கத்திலும் பாதை திறப்பு வைபவம் நடைபெற்றது. கண்டி வீதியில் படையினரின் சோதனை நிலையத்தில் இருந்து வடக்கே நான்கு மைல் தொலைவில் இராமனூர் என்னும் இடத்தில் புலிகளின் சோதனை நிலையம் அமைந்துள்ளது. நேற்று அங்கு இடம்பெற்ற வைபவத்தைத் தொடர்ந்து அங்கிருந்து சுமார் 400 பயணிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தனர். முதலில் புலிகளின் பகுதியிலிருந்தே பயணம் தொடங்கியது.

புலிகளின் சோதனை நிலையப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த சுதா, புலித்தேவன், தயாநிதி மாஸ்டர், பாப்பா, தமிழினி ஆகியோர் பிரசன்னமாகியிருந்து பயணிகளை வரவேற்றனர். 'புலிகளின்குரல்' வானொலி, 'ஈழநாதம்' பத்திரிகை செய்தியாளர்களும் படப்பிடிப்பாளர்களும் அங்கு குழுமியிருந்தனர்.

இரு தரப்புகளின் சோதனை நிலையங்களுக்கும் இடையே சுமார் 250 மீற்றர் பிரதேசம் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்தை மட்டும் பயணிகள் தமது உடைமைகளோடு நடந்துசென்று, கடந்து வாகனங்களில் ஏறி மேற்கொண்டு பயணம் செய்யலாம். பொருள்களை ஏற்றி வரும் வாகனங்களும் அப்பகுதியில் பொருள்களை இறக்கி மாற்றி ஏற்ற வசதி செய்யப்பட்டுள்ளது.

### எதிர்க்கட்சித் தலைவர் வரவேற்பு!

கண்டி வீதி பொதுமக்கள் பாவனைக்குத் திறக்கப்பட்டிருப்பதை வரவேற்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, இந்தப் பாதை யாழ்ப்பாணம் வரை திறக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதைகள் திறக்கப்பட்டிருப்பது தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது. இந்த நடவடிக்கையை எமது கட்சி வரவேற்கின்றது. தற்சமயம் கிளிநொச்சிவரை திறக்கப்பட்டுள்ள பாதையை யாழ்ப்பாணம் வரை திறந்து அப்பகுதி மக்களின் கஷ்டங்களையும் நீக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.(ஐ-3)

உயிலங்குளம் - மன்னார் வீதி திறப்பு வைபவம் நேற்று நண்பகல் 1.10 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வைப் பார்வையிடுவதற்காக அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, நூர்டீன் மசூர் ஆகியோரும் இராணுவத் தளபதி சகிதம் விசேட ஹெலிகொப்டர் மூலம் உயிலங்குளத்துக்கு வந்திருந்தனர். பிரதமரின் இணைப்புச் செயலாளர் பேனாட் திலகரட்ணாவும் அவர்களுடன் வந்திருந்தார். நேற்று சுமார் 50 பயணிகள் 8 ஆவது மைல்கல் பகுதியில் உள்ள படையினரின் சோதனை நிலையத்தைத் தாண்டி புலிகள் பகுதிக்குச் சென்றனர்.

புலிகளின் பகுதிக்குச் சென்ற பயணிகளை புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த மூர்த்தி மற்றும் உள்ளூர்ப் பிரமுகர்கள் வரவேற்றனர்.

நேற்றைய பாதை திறப்பு வைபவம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்க கொழும்பிலிருந்து செய்தியாளர்களும் படப்பிடிப்பாளர்களும் நேற்று வவுனியாவுக்குப் படையெடுத்து வந்திருந்தனர்.



கண்டி வீதி திறக்கப்பட்டதையடுத்து புலிகளின் பகுதிக்குச் சென்ற செய்தியாளர்களை புலிகளின் பிரமுகர்கள் வரவேற்று அவர்களோடு உரையாடும் காட்சி. *(படம்: வவுனியா செய்தியாளர்)*

ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்டதையடுத்து பிரமனாலங்குளம் ஊடாக இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த பாதை நேற்றுடன் மூடப்பட்டது.

இலங்கையின் உள்நாட்டுப் போரில

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கான பாதையும் திறக்கப்படும் என்கிறார் தளபதி

வவுனியா,பெப்.16

ஏ-9 கண்டி வீதி விரைவில் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரை திறக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல.

பாதை திறப்பு வைபவத்தைப் பார்வையிடுவதற்காக நேற்று வவுனியாவுக்கு வந்திருந்த சமயம் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.



யாழ் - கண்டி வீதியை முழுமையாக மக்கள் பாவனைக்குத் திறந்துவிடுவது குறித்து அரசு ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நிரந்தர யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்படுமாயின் விடுதலைப் புலிகளுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். - கிளிநொச்சி வீதியையும் எவ்வேளையும் திறக்கத் தயார்!

### புலிகள் பிரமுகர் தங்கன் தகவல்

வவுனியா,பெப்.16

கண்டி வீதியை ஆனையிறவு ஊடாக முகமாலைவரை திறந்துவிட நாங்கள் எப்போதும் தயாராக இருக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த சுதா (தங்கன்).

நேற்று கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் ஓமந்தையில் இருந்து அந்த வீதியூடாகப் புலிகளின் பகுதிக்குச் சென்ற செய்தியாளர்கள் குழுவினரை மாங்குளம் பகுதியில் சந்தித்துப் பேசிய சமயமே அவர் இதனைத் தெரிவித்தார்.

கண்டி வீதியில் கிளிநொச்சி தொடக்கம் முகமாலை வரையான எமது கட்டுப்பாட்டில் உள்ள வீதியில் கண்ணிகளை அகற்றி அதனைப் போக்குவரத்துக்குத் தயாரான நிலையில் வைத்திருக்கிறோம். குடாநாட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



இந்து சமய விவகார அமைச்சின் உப - அலுவலகத் திறப்புவிழா நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. அந்த வைபவத்தைத் தொடர்ந்து மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

முதலாவது படத்தில் யாழ்.நாகவிகாரையின் பீடாதிபதி ஞானரத்ன தேரர் ஆசியுரை வழங்குகிறார். அருகில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசார்ய சுவாமிகள், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மஹேஸ்வரக் குருக்கள், அருட்கவி சீ.விநாசித்தம்பி ஆகியோர் காணப்படுகின்றனர்.

அடுத்துள்ள படங்களில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.மாவட்ட எம்.பீ. மாவை சேனாதிராசா, இந்து கலாசார அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன், யாழ்.மாவட்ட எம்.பீ. இரவிராஜ், துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மாநகர மேயர் செல்லன் கந்தையன் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படங்கள்: பொ.இராஜேஸ்வரன்)*

# தீர்வு முயற்சியை அரசு இழுத்தடித்தால் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பேன்!

## இந்து விவகார அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளை இழுத்தடித்து, தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட ஐ.தே.கட்சி அரசு முயன்றால் அதற்குத் துணைபோகமாட்டேன். அதற்கு எதிராகக் குரல் கொடுப்பேன்.

- இப்படிக் கூறினார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன். யாழ். செயலகத்தில் அமைச்சின் உப - அலுவலகத்தை நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தபின் இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

அமைச்சுப் பொறுப்பை ஏற்றவுடன் இந்த உப - அலுவலகத்தை அமைக்க முடிவு செய்தேன். எனினும் இரு மாதங்களின் பின்பே ஆரம்பித்துள்ளேன். தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டதாலேயே காலதாமதம் ஏற்பட்டது.

தரைவழிப்பாதை திறப்பு, பயணப் போக்குவரத்துக்கான பாதுகாப்பு அனுமதி நீக்கம், மீன்பிடித் தடை நீக்கம், வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கம், விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுப் பேச்சு நடத்துதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டேன். இவற்றில் 40 சதவீதமானவற்றுக்கு தீர்வு கிட்டியுள்ளது. ஏனைய கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளன.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த உப - அலுவலகத்தை இன்று திறந்துள்ளோம்.

கடந்த தேர்தலில் ஐ.தே.கட்சி 113 ஆசனங்களைப் பெற்றது. யாழ் மாவட்டத்திலிருந்து நானும் ஓர் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படாமல், டக்ளஸ் தேவானந்தாவின் கட்சிக்கு மேலும் ஓர் ஆசனம் கிடைத்திருந்தால் இன்று டக்ளஸ் தேவானந்தாவே அமைச்சராகியிருப்பார். அவரது ஆட்சி இங்கு தொடர்ந்திருக்கும். மக்களின் இருண்ட யுகத்துக்கு முடிவு கிட்டியிராது.

சமாதானத்தை விரும்பும் மக்கள் தங்கள் வாக்குகளைச் செலுத்தி, என்னை நாடாளுமன்றம் அனுப்பியதால் சமாதானத்தை விரும்பும் ஐ.தே.கட்சி ஆட்சி அமைக்க முடிந்தது. ரணில் பிரதமரானபோதும் தற்போது 40 சதவீதமான அதிகாரங்கள்தான் அவர் கையில் உள்ளது. எஞ்சிய அதிகாரம் ஜனாதிபதி வசமே உள்ளது.

அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி அமைச்சர்களை மாற்றலாம். சமாதான முயற்சிகளைக் குழப்பலாம். ஒரு வருடத்தின் பின் அரசைக் கலைக்கவும் முடியும்.

இந்நிலையில்தான் ஐ.தே.கவின் ஆட்சி தொடர்கின்றது. எந்த விலை கொடுத்தும் சமாதமானத்தைக் கொண்டுவர பிரதமர் ரணில் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

குடாநாட்டில் சகல திணைக்களங்களின் பணிகளும் 'றான்' நிதி ஊடாக மேற்கொள்ளப்படும் நடைமுறை மாற்றப்படவேண்டும். ஒவ்வொரு திணைக்களத்துக்கும் ஒவ்வொரு அமைச்சு உண்டு. அந்த அமைச்சு மூலம் நிதியைப் பெற்று திட்டங்களைச் செயற்படுத்தவேண்டும்.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுப் பணிகளுக்காக அமைக்கப்பட்ட 'றான்' அமைப்பு பண்டாரவளையிலும் அநுராதபுரத்திலும் விருந்தினர் விடுதி அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கு மக்கள் தங்கிச் செல்ல இந்த விடுதி அமைக்கப்படுவதாக அந்த அமைப்புக் கூறுகின்றது. போரினால் அழிவுண்ட தென்மராட்சியை அபிவிருத்தி செய்வதை விடுத்து இந்த விடுதிகளை அவசர அவசரமாக அமைப்பதற்கு காரணம் என்னவோ தெரியவில்லை. வடக்கு மக்களுக்குக் கிடைக்கும் நிதியை வேறு மாவட்டங்களுக்குச் செலவிட அனுமதிக்கமாட்டேன். அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா முதற்றடவையாக இங்கு வந்தபோது அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் நானும் பங்குபற்றினேன். பின்னர் கடந்த வாரம் அவர் மீண்டும் இங்கு வந்த சமயம் நான் அதனைத் தவிர்த்துக் கொண்டேன்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள், ஈ.பி.டி.பி., புளொட் ஆகியவற்றிடமிருந்து ஆயுதங்களைக் களைதல் ஆகிய விடயங்களில் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் வரை அமைச்சர்கள் இங்கு வந்து நடத்தும் நிகழ்ச்சிகளில் இனிமேல் பங்குபற்றப்போவதில்லை என முடிவு செய்துள்ளேன்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசு பின்னடித்தால் அதற்கு எதிராகக் குரல் கொடுக்கப் பின்னிற்கமாட்டேன்.

- இவ்வாறு அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு யாழ்.செயலகப் பகுதிக்கு வருகை தந்த தி.மகேஸ்வரன் மங்கள வாத்தியங்கள் சகிதம் அமைச்சு அலுவலகப் பகுதிக்கு அழைத்துவரப்பட்டார். அதனைத் தொடர்ந்து பலரும் அமைச்சருக்கு மலர்மாலைகள் அணிவித்தனர்.

காலை 9.42 மணிக்கு அமைச்சர் தி.மகேஸ்வரன் அமைச்சு அலுவலகத்தை திறந்துவைத்தார். தொடர்ந்து சமயக் கிரியைகள் அந்தணப் பெருமக்களால் நடத்தப்பட்டன.

அதன்பின்பு அமைச்சர் தனது கடமைகளைச் சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார். இந்த நிகழ்வின் பின்பு செயலக மாநாட்டு மண்டபத்தில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இதில் நல்ல ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், யாழ்.நாகவிகாரையின் பீடாதிபதி ஞானரத்ன தேரர், தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் எஸ்.ஜெபநேசன், சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஐ. மஹேஸ்வரக் குருக்கள், அருட்கவி. சீ.விநாசித்தம்பி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ந.இரவிராஜ், இந்து கலாசார அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, மாநகர சபை முதல்வர் செ.கந்தையன், யாழ். சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த ச.செல்லத் துரை சுவாமிகள் மற்றும் அந்தணப் பெருமக்கள், பிரதேச செயலர்கள் திணைக்களத் தலைவர்கள், ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள், வர்த்தக சமூகத்தினர், அரசாங்க ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-3-10-180)




17.02.2002 இதழில்....

☆ படையினரின் வெற்றுப்பெட்டிகள்
வன்னி மாணவரின் தளபாடங்கள்;
சிதைந்த கட்டடங்களுக்குள்
சிதையாத நம்பிக்கை! - *வன்னி சிறப்புக் கட்டுரை*

☆ தடைகளைத் தாண்டவேண்டிய
புரிந்துணர்வு ஒப்பந்தம்

☆ தமிழகத்தை மத்தி தடவுகிறது
விடுதலைப் புலிகள் விவகாரத்தில்

☆ புலிகளின் சுதந்திரமான நடமாட்டம்
அனுமதிப்பதில் படைத்தரப்பு தயக்கம்

☆ முத்தரிப்புத் துறையில் தமிழ் எழுச்சி விழா

☆ மற்றும் பல சிறப்பு அம்சங்கள். (C/20777)


## மக்கள் குடியமர விரைவில் அனுமதி

கொழும்புத்துறை ஜே61.ஜே62 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள மிதிவெடிகளை அகற்றி மக்கள் மீளக்குடியமர விரைவில் அனுமதி வழங்கப்படும் என்று 512ஆவது படையணித் தளபதி உறுதியளித்துள்ளார்.

கொழும்புத்துறை இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கப் பிரதிநிதிகள் தளபதியை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர். அச்சமயமே இந்த உறுதி மொழியை தளபதி வழங்கினார். (ஐ-3)

## வழக்கு விசாரணை

நாரந்தனைத் தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றும் யாழ்.நீதிமன்றில் இடம்பெற்றது.

நேற்றைய தினம் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் கார்ச் சாரதியான அன்ரன் யோகநாதன் ராசன் என்பவரின் வாக்கு மூலம் பதிவுசெய்யப்பட்டது.

இரண்டாவது சந்தேகநபரான என்.மதனராஜா சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார். இதனையடுத்து வழக்குவிசாரணையை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்தி வைத்தார். (ஐ-10)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்தவரும் நவசக்தி சனசமூக நிலைய ஸ்தாபகரும், போசகரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய

### அமரர் சுப்பன் அப்புத்துரை

(விதானையார்)

அவர்களின் மறைவையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவசக்தி சனசமூக நிலையம்,
நவசக்தி முன்பள்ளிக் கழகம்,
நவசக்தி விளையாட்டுக் கழகம்.

*உரும்பிராய் வடக்கு.*
*உரும்பிராய்.* (770)

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை முத்தையா

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய உதவிக் கணக்காளர் நாயகமும் நந்தாவில் மனோன்மணி அம்மன் ஆலய பரிபாலன சபை முன்னாள் தலைவருமான தாமோதரம்பிள்ளை முத்தையா அவர்கள் 14.02.2002 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தங்கேஸ்வரி (இரத்தினம்) அவர்களின் அன்புக் கணவரும் தாமோதரம்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் திருமதி பத்மினி (கனடா), விஜயஸ்ரீ (கனடா), திருமதி ரஞ்சனி (அமெரிக்கா), ரமேஷ் (கனடா), சுரேஷ் (கனடா), தயானி (கனடா), ரனேஸ் (கனடா), சுகந்தினி (கனடா), சுபாஷினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (18.02.2002) திங்கட்கிழமை (கனடா நேரம் 10 - 12 இடையில்) கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"குமாரோதயம்"*
*றெயில் றோட் அருகில்,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (764)

தகவல்:
ந.சிவகுமார்
(பெறாமகன்)

### வேலன் ஆறுமுகம்

சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாயைச் சேர்ந்த வேலன் ஆறுமுகம் 15.02.2002 (வெள்ளி) மாலை 6மணியளவில் அவரது இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் ராசமலரின் அன்புக் கணவரும், நாகேஸ்வரன், அழகேஸ்வரன், புவனேஸ்வரன் (டென்மார்க்), லோகேஸ்வரன் (கொழும்பு), பத்மேஸ்வரன் (சுவிஸ்), பத்மேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி, செல்வம், சுகந்தி (டென்மார்க்), பிறேமினி, தயானந்தராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 16.02.2002 (சனி) நடைபெற்று அளவெட்டி கொட்டுப்பனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய்.* (C/20779)

தகவல்:
தயா (மருமகன்)

### சுவாம்பிள்ளை சவரிமுத்து

(அக்காஸ் அன் சன்ஸ், கச்சேரியடி)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை சவரிமுத்து கொழும்பில் 14ஆம் திகதி காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை - சவிணம் ஆகியோரின் மகனும், அன்னம்மாவின் சகோதரரும் லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும் பெனடிட் காலஞ்சென்ற கிறஸ்தோப்பர் (விஜி) மற்றும் வதனி, சுரேஸ்குமார், சந்திரகுமார், ரஞ்சனி, ரஜி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சனி, பவானி காலஞ்சென்ற சக்கரி மென்தாஸ் மற்றும் கிரி, நிமலினி, ராஜேந்திரன், செல்வராஜா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (16.02.2002) கொழும்பில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*132/1, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (762)

தகவல்:
கி.பவானி (மருமகள்),
கோபி, பிரியங்கா
(பேரப்பிள்ளைகள்)

### மக்காவுக்கு விமானம் அனுப்பாததால்

# ஆத்திரமடைந்த மக்கள் கூட்டம் அமைச்சரை அடித்துக் கொன்றது!



பலஸ்தீன ஆயுததாரிகள் சிலர்

## காபூல் விமான நிலையத்தில் கொடூரம்



அப்துல் ரஹ்மான்

காபூல்,பெப்ரவரி16

**புனித ஹஜ் கடமைகளுக்காக மக்கா செல்வதற்கு விமானம் விடப்படாததால் ஆத்திரமடைந்த நூற்றுக்கணக்கான ஆப்கான் யாத்திரிகர்கள் அந்த நாட்டின் சிவில் நிர்வாகத் துறை அமைச்சரான அப்துல் ரஹ்மானை அடித்துக் கொன்றுள்ளனர். அமைச்சர் கொல்லப்பட்டதை நேற்று வெள்ளிக்கிழமை காபூலில் அரச அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.**

ஹஜ் கடமைகளுக்குச் செல்வதற்காக சுமார் ஆயிரம் ஆப்கான் யாத்திரிகர்கள் காபூல் விமான நிலையத்தில் காவலிருந்தனர். இரண்டு நாள்



காபூல் விமான நிலையத்தில் - காத்திருந்த ஹஜ் யாத்திரிகர்கள்.

களாகக் காத்திருந்தும் அவர்கள் சவூதி செல்வதற்காக எந்த விமானமும் விடப்படவில்லை. இதனால் யாத்திரிகர்கள் கடும் ஆத்திரமடைந்திருந்தனர்.

இந்தநிலையில் புதுடில்லி செல்வதற்காக அமைச்சர் அப்துல் ரஹ்மான் நேற்றுமுன்தினம் இரவு காபூல் விமான நிலையத்துக்கு வந்தார்.

ஆத்திரமடைந்திருந்த யாத்திரிகர்களில் நூற்றுக்கணக்கானோர் அமைச்சரரைச் சூழ்ந்துகொண்டு தாக்க ஆரம்பித்தனர். தாக்குதலால் பயந்துபோன அமைச்சர், அவர்களிடமிருந்து தப்புவதற்கு எத்தனித்தார். ஆனால் அவரால் தப்பமுடியவில்லை.

அமைச்சரின் பாதுகாப்புக்காக வந்த பொலிஸாராலும் விமான நிலைய அதிகாரிகளாலும் விமானநிலையத்தில் கடமையிலிருந்த சர்வதேச அமைதிப் படையினராலும் கூட அந்த மூர்க்கத்தனமான கும்பலிடமிருந்து அமைச்சரை உடனடியாக மீட்கமுடியாமற்போயிற்று. ஒரு வழியாகக் கும்பலிடமிருந்து அதிகாரிகள் அமைச்சரை மீட்டபோது அவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருந்தார்.

உடனயடியாக அவர் காபூல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தால் இடைக்கால அரசும் காபூல் மக்களும் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர்.

இடைக்கால அரசு வியாழனன்று நள்ளிரவு அவசர அவசரமாகக் கூடி தாக்குதல் குறித்து ஆராய்ந்தது.

பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை காபூலில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று ஏ.எவ்பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இதற்கிடையில் -

சம்பவம் இடம்பெற்ற பின்னிரவில் காபூல் விமான நிலையத்துக்கு வந்த இரு விமானங்கள் 890 யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு மக்கா நோக்கிப் பறந்தன.

இவர்களில் அமைச்சரைத் தாக்கியவர்களும் இருந்திருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. அமைச்சரின் கொலை தொடர்பாக அங்கிருந்த எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது காபூல் விமான நிலையத்துக்கு மேலதிகத் துருப்பினர் அனுப்பப்பட்டுள்ளனர். மக்கா செல்வதற்கான ரிக்கெட்டுக்களை கைகளில் வைத்துக்கொண்டு டஸின் கணக்கானோர் இன்னும் அங்கு காத்து நின்கின்றார்கள். (ம)

உலக அரங்கில்

## பலஸ்தீனரின் தாக்குதலில் மூன்று இஸ்ரேலியர் பலி!

ஜெருசலேம்,பெப்.16

மேற்குக்கரையில் காஸா நகருக்குத் தென்கிழக்கே உள்ள நெற்சாீம் என்ற இடத்துக்கு அருகில் பலஸ்தீன ஆயுததாரிகள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் மூன்று இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமடைந்தனர்.

இஸ்ரேலியப் படையினரின் பாதுகாப்புடன் வந்த பொதுமக்கள் வாகனத் தொடரணி மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மேற்குக்கரை கிராமங்களில் இஸ்ரேலிய டாங்கிகளும் படையினரும் சோதனை நடத்திவிட்டு வெளியேறிய சில மணி நேரத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. தாக்குதல் இடம்பெற்றதும் ஹெலிகளில் சென்ற இஸ்ரேலியப் படையினர் உடனேயே சாய்டா என்ற கிராமத்தில் தரையிறங்கினர். அங்கு அவர்களுக்கும் பலஸ்தீன ஆயுததாரிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இஸ்ரேலியப் படையினர் இஸ்லாமிய ஜிகாத் குழு உறுப்பினர் ஒருவரின் வீட்டை வெடி வைத்து தகர்த்துள்ளனர்.



காயமடைந்த இஸ்ரேலியச் சிப்பாய் ஒருவர் மருத்துவமனைக்கு எடுத்துசெல்லப்படுகிறார்.

பொதுமக்களின் வாகனத் தொடரணி மீது இடம் பெற்ற தாக்குதலுக்கு 'சலாகுதீன் பிரிகேட்' என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை இஸ்ரேலியப் படையினர் 6 பலஸ்தீனர்களைக் கொன்றதற்குப் பழிவாங்கவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்புக்கு ஹமாஸ் இயக்கத்துடனும் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் 'பட்டா' அமைப்புடனும் நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் -

இதனாலேயே அவர்கள் இயந்திரத் துப்பாக்கிகளையும் டாங்கி எதிர்ப்பு மோட்டார்களையும் பயன்படுத்தியதாகவும் - இஸ்ரேலியத் துருப்பினர் தெரிவிக்கின்றனர். (ம)

## காதலர் தினத்தன்று 10 ஜோடிகள் நிர்வாணமாக நின்று திருமணம்

கிங்ஸ்ரன்,பெப்.16

மேற்கு இந்தியத் தீவான ஜமேக்காவில் காதலர் தினமான நேற்றுமுன்தினம் 10 ஜோடிகள் நிர்வாணமாக நின்று திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

திருமணம் செய்துகொண்ட அனைவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலாவுக்காக வந்த இவர்கள் இந்த வினோதமான செயலைப் புரிந்துள்ளனர்.

ஜமேக்காவின் வடக்கு கடற்கரையில் உள்ள 'ஹெடோனிசம் ரீ' என்ற தனியார் உல்லாசப் பயணிகளுக்கான இடத்திலேயே இந்தத் திருமணங்கள் இடம்பெற்றன.

இத்தகைய திருமணங்கள் கிறிஸ்தவ சமயத்துக்கும் அதன் கொள்கைகளுக்கும் விரோதமானவை என்று கிறிஸ்தவ அமைப்புக்கள் பல கண்டனங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டும் ஜமேக்காவில் 11ஜோடிகள் இவ்வாறு திருமணம் செய்து கொண்டனர். ஆனால் அவர்கள் தலையில் தொப்பியும் முகத்தை மூடிக்கட்டிய துணியுமாகவே திருமணத்தில் கலந்துகொண்டனர்.

அப்போது அவர்களது திருமணத்துக்கு எதிராகப் பல நூற்றுக்கணக்கான உள்ளூர் மக்கள் கேலியாக எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள்.

ஆனால் இந்த ஆண்டு இந்தத் திருமணத்துக்கு எதிர்ப்புகள் குறைவாகவே காணப்பட்டன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிர்வாண ஜோடிகள் விரைவில் மீண்டும் மற்றவர்களைப் போல் திருமணம் செய்துகொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம)



**மனிதர்கள் மட்டுமல்ல நாங்களும் காதலிப்போம், காதலர் தினத்தில் திருமணம் செய்துகொள்வோம் என்று நேற்றுமுன்தினம் தாய்லாந்தில் இரு யானைகள் கோலாகலமாகத் திருமணம் செய்து கொண்டன. குச்ஹார்ட் (வலது) மற்றும் நும்ஹான் ஆகிய இரு யானைகளுக்குமே தாய்லாந்தின் தேசிய பூங்கா ஒன்றில் திருமணம் செய்து வைக்கப்பட்டது.**

**திருமணம் முடிந்த பின்னர் குச்ஹார்ட்டுக்கு அன்புடன் இனிப்புப் பண்டத்தை ஊட்டிவிடுகிறது நும்ஹான்**

## அல்கெய்டா அமைப்புக்கு புதிய படைத்தளபதி தெரிவு

### அமெரிக்கா மீதான தாக்குதல் தீவிரமாகும்

நியூயோர்க்,பெப்.16

உலகம் முழுவதும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுவருவதாக அமெரிக்காவால் குற்றஞ்சாட்டப்படும் அல்கெய்டா அமைப்புக்குப் புதிய போர்ப்படைத் தளபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய தளபதியாகப் பலஸ்தீனத்தைச் சேர்ந்த அபுசுபைதா (வயது 30) தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

அபுசுபைதா பதவியேற்றதும் கடந்த சில மாதங்களாகச் செயலிழந்திருந்த அல்கெய்டா அமைப்பு மீண்டும் சுறுசுறுப்புடன் செயற்பட ஆரம்பித்துள்ளது.

அமெரிக்கா மீதும் அதன் நேச நாடுகள் மீதும் மிகப்பெரும் தாக்குதல்களை நடத்த அல்கெய்டா தயாராகி வருவதாக சி.ஐ.ஏ. கூறுகின்றது.

இதற்காக அபுசுபைதா பல்வேறு போலிப் பெயர்களில் பாஸ்போட்டுக்களைப் பெற்றுள்ளதாகவும் சி.ஐ.ஏ. அதிகாரி ஒருவர் கூறினார். இவரது தலைமையில் அமெரிக்கா மீது பெரும் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும் -

புலனாய்வுத்துறை அதிகாரிகள் அதனைக் கண்டுபிடித்து முறியடித்துவிட்டதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

செப்ரெம்பர் 11இல் அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலுக்கும் அபுசுபைதாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்கிறார்கள் அமெரிக்க அதிகாரிகள். ஒஸாமா பின்லேடனின் மிக நெருங்கிய நண்பர்களில் அபுசுபைதாவும் ஒருவர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய தீவிர தாக்குதலில் அல்கெய்டா இயக்கத்தின் போர்ப்படைத் தளபதியான மூஹமது அட்டாப் கொல்லப்பட்டார். அவருக்குப் பதிலாகவே தற்போது அபுசுபைதா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அபுசுபைதா புதிய தளபதியாகப் பதவியேற்றது உண்மையானால் அமெரிக்கா ஆரம்பித்துள்ள சர்வதேசத் தீவிரவாதத்துக்கு எதிரான போர் மிக நீண்டதாகவும் மிகமிகக் கடினமானதாகவும் இருக்கும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ம)

## கடத்தப்பட்ட பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்டுவிட்டார்?

### ஷேக் உமர் நீதிமன்றில் வாக்குமூலம்



டானியல் பேர்லின் கர்ப்பிணி மனைவி மரியன்.

அமெரிக்கப் பத்திரிகையாளரான டானியல் பேர்ல் கொல்லப்பட்டுவிட்டார் என்று அவரைக் கடத்தியதாகக் கருதப்படும் ஷேக் உமர் தெரிவித்துள்ளார்.

ஷேக் உமர் நேற்றுமுன்தினம் கராச்சி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அப்போதே டானியல் கொல்லப்பட்ட விடயத்தை வெளியிட்டார். பத்திரிகையாளரைத் தான் கடத்தியதை நீதிமன்றில் ஏற்றுக்கொண்ட உமர், டானியல் எப்போது கொலை செய்யப்பட்டார் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

ஷேக் உமரின் வாக்குமூலத்தில் சந்தேகம் உள்ளது என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மொய்னுதீன் தெரிவித்தார். "பத்திரிகையாளர் டானியலின் உடலை அடையாளம் காணும்வரை உமரின் வாக்குமூலத்தை நம்பமுடியாது. டானியல் இறந்ததுபற்றி எமக்கு ஆதாரபூர்வமாகத் தெரியும்வரை விசாரணைகள் தொடரும்" - என்று தெரிவித்தார் அவர்.

இதற்கிடையில், தனது கணவரை விடுவிக்குமாறு டானியலின் கர்ப்பிணி மனைவி கடத்தல்காரர்களிடம் மீண்டும் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"டானி ஓர் அப்பாவி மனிதன். அவர் ஒரு பத்திரிகையாளர். அவர் உங்களைச் சந்தித்து உங்களது கருத்துக்களை வெளிஉலகுக்குக் கொண்டு வருவதற்காகவே செயற்பட்டார். வேறு எவருடனும் அவருக்குத் தொடர்பு இல்லை. டானியும் நானும் சமாதானத்தை விரும்புபவர்கள். எங்களுக்கு பிறக்க இருக்கும் குழந்தைக்காகவேனும் டானியை விடுவியுங்கள். அந்த அப்பாவிக் குழந்தை தனது தந்தையுடன் பேச அனுமதியுங்கள்" - என்று கடத்தல்காரர்களுக்கு, எழுதிய கடிதத்தில் மரியன் பேர்ல் உருக்கமாகத் தெரிவித்துள்ளார். (ம)

# மெய்வன்மைப் போட்டிகள்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலைக் கனிஷ்ட பிரிவின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கனிஷ்ட பிரிவு அதிபர் க.சிவநேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆசுணேசலிங்கமும் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கமும் கலந்து கொள்கின்றனர். (க-9-90)

★ ★ ★

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2மணிக்கு அதிபர் ந.அரியரத்தினம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இப் போட்டிகளில் வடமராட்சி பிரதக கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலர் நிதி உதவியாளர் வ.இளையதம்பியும் கலந்துகொள்வர்.(க-ரி-15)

★ ★ ★

சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சுன்னாகம் அந்தோனியார் ஆலய முன்றிலில் பாடசாலை அதிபர் செல்வி அ.ஜெயநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தனும், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் ப.நோ.கூ.ச. தலைவர் எஸ். குமாரவேலும் கலந்துகொள்கின்றனர். (க-9)

★ ★ ★

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மற்றும் கன்னியர் மடம் மகா வித்தியாலயம் ஆகியன இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக அச்செழுவில் உள்ள 511 ஆவது படையணித் தளபதி கேணல் ரி.பமல் மெடீன் கலந்துகொள்வார். (3-10-48)

## இலவச வைத்திய பரிசோதனை முகாம்

வலி.கிழக்கு,பெப்.16

உரும்பிராய் தெற்கு யோகபுரம், செல்வபுரம் ஆகிய பகுதிகளில் இலவச வைத்திய பரிசோதனை முகாம் ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் வைத்திய அதிகாரிகளும் இணைந்து நடத்தவுள்ளனர்.

செல்வபுரத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை உதயசூரியன் சனசமூக நிலையத்திலும், யோகபுரத்தில் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யோகபுரம் அண்ணா சனசமூக நிலையத்திலும் இந்த இலவச மருத்துவ பரிசோதனைகள் நடைபெறும். (க-180)

## பரிசளிப்பு விழா

புன்னாலைக்கட்டுவன்,பெப்.16

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய பெற்றோர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் அதிபர் கனகராசா தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யூ.என்.எச்.சி.ஆர். நிறுவன சிரேஷ்ட களநிலை அலுவலர் பொ. பாலகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலனும், கௌரவிருந்தினராக தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் ச.தனபாலசிங்கமும் கலந்துகொள்வர். (க-133)


**Jaffna District Cricket Association**

Application for Cricket Coaching Award

Course Level - 1

**Board of Control for Cricket in Sri Lanka**

Those wishing to apply could obtain the forms, from either, The President J.D.C.A. or Mr.K.Shanmugalingam, District Cricket Coach. All prefected forms should reach me on or before Friday 22.02.2002.

*347, Kasturiar Road,* **President.**
*Jaffna.* (C/20764) J.D.C.A.



வெளிநாட்டு பிளாஸ்ரிக் சிகிச்சை நிபுணர்களுடன் வந்துள்ள கண்பரிசோதகர்களின் (INTER - PLAST - U.K.) நிகழ்வு

**இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்**

*இடம்:* மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை - மூளாய்
*காலம்:* 21.02.2002அம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம்
*பயனாளிகள்:* வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள நோயாளர்கள் பரிசோதித்துத் தெரிவுசெய்யப்படுவர்.

கண்பூ (CATARACT) உள்ளவர்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.
55 வயதிற்கு உட்பட்டவர்கள் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
(கண்பார்வை குறைந்தவர்கள் மாத்திரம்)
*முன்கூட்டியே எமது வைத்தியசாலையில் பதிவுசெய்துகொள்ளவும்.*

தலைவர்,
கூட்டுறவு வைத்தியசாலை,
*மூளாய்.*

*மூளாய்,*
*சுழிபுரம்.*

*விளம்பர அன்பளிப்பு:-*
**சரவணாஸ் வர்த்தக நிலையம்,**
*மருத்துவமனை வீதி, மூளாய்.* (749)



**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**இல்ல மெய்வன்மைப் போட்டி**
**2002**

*காலம் :* இன்று (16.02.2002) சனிக்கிழமை பி.ப.1.30 மணி
*இடம் :* கல்லூரி மைதானம்
*தலைவர்:* திரு.பொ.கமலநாதன் (அதிபர்)
*பிரதம விருந்தினர்:* திரு.க.கணேசநாதன் அவர்கள்
*(இணைப்பாளர், உடற்கல்விப் பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம்)*
*பரிசில் வழங்கல்:* திருமதி ஞானசக்தி கணேசநாதன்

*பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(சி-20760) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



**ஜோ.எகட்டனின் ஜெசித்தாராவின்**
**இன்றைய ஸ்பெஷல் : கோழிப் புரியாணி**
சிலிசிக்கனுடன் ரூபா 250/= மட்டுமே!
வழமையான உணவுப் பொதிகளும் உண்டு.
உணவு நேரம்: நண்பகல் 12.00 மணிமுதல் 3.00 மணிவரை.
ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா உங்கள் விருந்தகம்.
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
நவயுகத்தின் நவநாயகி ஜெசித்தாரா!
சுவையின் மறுநாமம் ஜெசித்தாரா!! (754)



மீண்டும **ஜோ.எகட்டன்**
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங்சிஸ்டம் ஸ்தாபனத்தின் விநியோகத்தில் 70 வருட பழைமைவாய்ந்த
தோலகட்டித் தயாரிப்புகள்:
**தோலகட்டி நெல்லிரசம், முந்திரிகைரசம்**
★ வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.
சந்தைப்படுத்துவோர்:
**ஜோ.எகட்டன்**
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங்சிஸ்டம்ஸ்,
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. சுண்டுக்குளி. யாழ்ப்பாணம். (755)


## மரண அறிவித்தல்

### தம்பையா தியாகராஜா

*(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - நல்லூர்)*

இணுவிலைப் பிறப்பிடமாகவும், தாவடிச் சந்தியை வசிப்பிடமாகவுங் கொண்ட தம்பையா தியாகராஜா அவர்கள் 15.02.2002 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், றஜனி (கனடா), குகதீசன் (கனடா), பாரதி (சுவிஸ்), குகரூபன் (கனடா), வாணினி (கனடா), சிவாஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாகரன் (கனடா), சுமதி (கனடா), ஜெயனரதன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆதித்தன் (கனடா), ஆதித்தியா ஆகியோரின் பேரனும், ஞானேஸ்வரி, தங்கலட்சுமி (கனடா), செல்வலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), கமலாதேவி (கனடா), விமலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற முருகேசு (இலங்கை வங்கி) மற்றும் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), நடராஜா (கனடா), பாலசிங்கம் (லண்டன்), தர்மலட்சுமி, கிருபானந்தன் (கனடா), கமலாதேவி (அமெரிக்கா), பரிமளகாந்தி (சுவிஸ்), அருளானந்தன் (சுவிஸ்), நடேசானந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் புண்ணியலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/இந்துக் கல்லூரி), வசந்தகுமார் (அமெரிக்கா), அரியதவசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் புவிமதி (கனடா), தர்சினி (சுவிஸ்), நந்தினி (கனடா), ஆகியோரின் அத்தானுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.பாலசிங்கம் (மைத்துனர்),
*மஞ்சத்தடி, இணுவில்.*

மகிழினி கிரிதரன் (பெறாமகள்),
*தாவடிச் சந்தி, கொக்குவில்.*

(759)


"இலங்கை இந்துமத குருபீடாதிபதி" சிவாகம ஞானி
**அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்** அவர்களின்
ஐந்தாவது ஆண்டு ஞாபகார்த்த

**ஆன்மீகப் பெருவிழா**

இடம் : மயூரபதி அம்பாள் தேவஸ்தான சுப்பம்மாள் கல்யாண மண்டபம்
காலம் : 24-02-2002 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணிமுதல் 9.00 மணிவரை

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி"
**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**
அவர்கள் தலைமையில் விழா நடைபெறும்.

சிவாச்சாரியார்கள், அறங்காவலர்கள், சமய, சமூகப்பணிபுரிகின்றவர்கள், நாதஸ்வர - தவில் கலைஞர்கள், வானொலி - தொலைக்காட்சிக் கலைஞர்கள் உட்பட 75 பிரமுகர்கள் விழாவில் பொன்னாடை போர்த்துப் பட்டமளித்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

**பிரதம அதிதிகள்**
சிவாகம பூஷணம் பிரம்மஸ்ரீ பா.ஷண்முகரெட்ணசர்மா J.P. (மருதானை)
பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் (நவாலியூர்)
சிவாகம பூஷணம் சிவஸ்ரீ சதா சுப்ரமணியப்பட்டர் (ராமகான சபை)
பிரதிஷ்டா கலாநிதி சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக்குருக்கள் (கொழும்பு)
சகலாகம சங்கிரகர் சிவஸ்ரீ நா.சர்வவேஸ்வரக்குருக்கள் (சுன்னாகம்)
சிவாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் (இணுவில்)

**விஷேட அதிதி**
இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர்
மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள்
(யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)

**சிறப்பு அதிதிகள்**
கௌரவ அமைச்சர் P.சந்திரசேகரன் அவர்கள்
*(நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)*
*கொழும்பு மாநகர முன்னாள் நகர பிதா*
கௌரவ டி.எம்.சுவாமிநாதன் அவர்கள்
*(தர்மகர்த்தா - ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்)*
கௌரவ கே.கணேசலிங்கம் அவர்கள் J.P.U.M.
*(போஷகர் சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம்)*
கௌரவ வி.ரி.வி.தெய்வநாயகம்பிள்ளை அவர்கள் J.P.
*(தர்மகர்த்தா - ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்)*
எம்.எஸ்.செல்லச்சாமி
*(இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதித்தலைவர்)*
கௌரவ பொன்.வல்லிபுரம் அவர்கள் J.P.
*(தர்மகர்த்தா - மயூரபதி அம்மன் தேவஸ்தானம்)*
கௌரவ ஜெ.திவ்வியநாதன் அவர்கள்
*(ஸ்ரீ சாஸ்தாபீட முத்தமிழ்ச் சங்க ஆலோசகர்)*
கௌரவ மனோ கணேசன் அவர்கள்
*(கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சிவஸ்ரீ க.சிவபாலக்குருக்கள்
கௌரவ செயலாளர் - இந்துமத குருபீடம்

**சர்வதேச இந்துமத குருபீடம்**
(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)
**அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**
751/A, புளூமெண்டால் றோட், கொழும்பு - 15. T.P.: 072-422239, Fax: 327025
(C/20765)

## உதயன்

### ஜனாதிபதியை வருத்தும் சந்தேகம்

முழுநாட்டையுமே சுட்டெரித்து வந்த தேசிய இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நோர்வே உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையை மீண்டும் வெளியிட்டிருக்கிறார்.

சமாதான முயற்சிகளால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் ஏனைய இனங்கள், கட்சிகள் ஆகியனவற்றின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் என்பன குறித்து ஜனாதிபதி கவலை கொண்டிருப்பதாக அவரது பேச்சாளர் கூறியிருக்கிறார்.

சமாதான முயற்சிகள் தொடங்கி - அது ஒரு தெளிவான தடத்தில் நகரத் தொடங்கிய பிறகு - அதுகுறித்து நாட்டின் தலைவியான ஜனாதிபதி தன்னை வருத்தும் சந்தேக உணர்வை வெளிப்படுத்தியிருப்பது அண்மைக்காலத்தில் இது மூன்றாவது முறையாகும்.

நாட்டில் யுத்தமோ, சமாதானமோ முடிவெடுக்கும் அதிகாரம் தனக்கே உரியது என்று பத்திரிகைப் பேட்டி ஒன்றில் அவர் முழங்கியிருந்தார்.

"சமாதான முயற்சிகள் எதுவானாலும் அதுபற்றி அறிவிப்பதும், பேச்சுக்கான உத்தியோகபூர்வ பிரகடனத்தைச் செய்வதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கடமைகள். அதனை நாடாளுமன்றமோ, பிரதமரோ செய்ய முடியாது.

"நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும், ஆரோக்கியமான செயற்பாட்டிற்கும், ஏனைய நலன்களுக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களே பொருத்தமானவை" என்றும் ஜனாதிபதி அண்மையில் நாட்டு மக்களுக்கு அறிவித்திருந்தார்.

தற்போதைய சமாதான முயற்சிகள் மீது நாட்டு மக்களுக்கு தீவிர நம்பிக்கை, எதிர்பார்ப்பு. ஆனால் நாட்டின் தலைவியான ஜனாதிபதிக்கோ ஒரே சந்தேகம்.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஏதும் ஊறுவிளைவித்துவிடுமோ என்று அஞ்சுவதுபோன்று ஜனாதிபதியின் கூற்றுக்கள் அமைந்தாலும் தனது பாதுகாப்புத் தொடர்பாக அவர் கொண்டுள்ள சந்தேக உணர்வே உள்ளூர அவரை வாட்டத் தொடங்கி இருப்பதுபோலத் தெரிகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தேர்தலில் ஈட்டிய வெற்றி, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த மக்கள் அவருக்கு வழங்கிய ஆணை, மக்கள் மத்தியில் பிரதமருக்கு அதிகரித்துவரும் செல்வாக்கு, சமாதான முயற்சிகள் முன்னெப்போதும் இல்லாதவாறு நல்லெண்ணச் சூழ்நிலைக்கு மத்தியில் பிசகு இன்றித் தொடர்வது ஆகியன -

தன்னுடைய அரசியல் எதிர்காலம் குறித்துமட்டுமல்ல தனது இருப்புப் பற்றிக்கூட ஜனாதிபதிக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமாதானப் பேச்சுக்களில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளப்போகும் விடுதலைப் புலிகளோடு புதிய அரசு நெருக்கமாக உறவுகளை வளர்ப்பது 'நெருப்போடு விளையாடுவது' போன்றது. அதில் எச்சரிக்கை உணர்வு அவசியம் என்று ஜனாதிபதி காட்டிக்கொண்டாலும் -

நாட்டில் சமாதானத்தை - நிரந்தர அமைதியை- ஏற்படுத்த வேண்டுமானால் விடுதலைப் புலிகளோடு மட்டுமே பேச வேண்டும் - பேசித்தான் ஆகவேண்டும் - என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவாக வடக்கு - கிழக்கிலும், தெற்கிலும் தேர்தலில் வாக்களித்த மக்கள் ஜனாதிபதியின் கருத்துக்களை நிராகரிக்கவே செய்வர்.

இதே ஜனாதிபதிதான் சுமார் நான்கு ஐந்து ஆண்டுகளாக மேற்கொண்ட 'சமாதானத்துக்கான யுத்தம்' நாட்டையும், மக்களையும், பொருளாதாரத்தையும் அழித்துக் குட்டிச்சுவராக்கியது. நாட்டின தேசிய பாதுகாப்பை முன்னொருபோதும் இருந்திராத பலவீனமான நிலைக்கு இட்டுச்சென்றது என்பதை ஜனாதிபதி மறந்தாலும் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

தற்போதைய சமாதான முயற்சி நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் என்று ஜனாதிபதி கூறுவதை சமாதானத்தை அவாவி நிற்கும் எந்த இனமக்களுமே ஏற்கப்போவதில்லை.

மாறாகச் சமாதான முயற்சிகள்மீது அவநம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக அவர் கூறிவரும் கருத்துக்கள் -

அமைதித் தீர்வுகாணும் நோக்கில் நடத்தப்படவுள்ள பேச்சுக்கள் இணக்கமான ஒரு தீர்வுக்கு வந்தாலும் நாட்டின் தலைவியான ஜனாதிபதி அதற்குக் குறுக்கேவந்து குழப்பியடித்துவிடுவாரோ என்ற சந்தேகத்தை - 'வெண்ணெய் திரண்டுவந்தாலும் ஜனாதிபதி எப்படியாவது தாழியை உடைத்துவிடுவார்' என்ற ஐயத்தை - நாட்டுமக்கள் மத்தியில் ஏற்படுத்திவருகிறது.

ஜனாதிபதியின் போக்கு இப்படியே தொடர்ந்தால் -

சமாதானமா, ஜனாதிபதியா என்பதை முடிவு செய்யும் நிலைக்கு நாட்டு மக்கள் தள்ளப்படலாம்.

# வவுனியாவில் பெண் பயணிகள் சிப்பாய்களால் உடற் சோதனை

## நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டார் இராணுவ அதிகாரி

வவுனியா,பெப்.16

வவுனியா தாண்டிக்குளம் சோதனைச்சாவடி ஊடாகப் பயணம் செய்யும் பெண்களை, ஆண்சிப்பாய்கள் உடற் சோதனை செய்வது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.


இவ்வாறு வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் நொச்சிமோட்டை இராணுவப் பொறுப்பதிகாரி கப்டன் பண்டிதவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பெண்களைச் சோதனையிடும் தேவையிருப்பின் அப்பகுதியில் பெண் சிப்பாய்களை கடமையில் அமர்த்தி சோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் நீதிவான் பணித்தார்.

நொச்சிமோட்டைப் பகுதியில் தமது நிலைகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரில் ஆண் சிப்பாய்கள் உடற்சோதனை என்ற பெயரில் விஷமத்தனங்களில் ஈடுபடுவதாக நீதிமன்றத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இதனையடுத்து தாண்டிக்குளம் பிரதேசத்துக்குப் பொறுப்பான நொச்சிமோட்டை இராணுவத்துக்கு பொறுப்பான அதிகாரியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

நீதிமன்றத்தில் ஆஜரான கப்டன் பண்டித இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (ஒ)



யாழ்ப்பாணம், நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால், சுய தொழிலில் ஈடுபடுவோருக்கான கடன் வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றது. 15 பயனாளிகளுக்கு தலா 10ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டது. பயனாளி ஒருவருக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ. நிர்மலன் கடனுதவியை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் மேற்படி சங்கத் தலைவர் கை.சீவரட்ணமும் காணப்படுகின்றார். (க)

# இசைக் கருவிகளின் காட்சியகம் விரைவில் இணுவிலில் அமைக்கப்படும்

## நூல்வெளியீட்டு விழாவில் சபா.ஜெயராசா

யாழ்ப்பாணம்,பெப்.16

பழங்காலந்தொட்டு இசை மரபைப் பேணிவருவது இணுவில் கிராமம். இங்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைப்பீட அனுசரணையுடன் இசைக் கருவிகள் பற்றிய அரும் பெரும் காட்சியகம் ஒன்றை விரைவில் அமைக்கவுள்ளோம்.

இணுவில் கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் இயற்றிய 'இணுவைக் கந்தன் கீர்த்தனைகள்' நூல் வெளியீட்டு விழாவில் நூல் ஆய்வுரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக் கழக நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா மேற்கண்டவாறு கூறினார்.

இணுவில் கந்தசுவாமிகோயில் தர்மகர்த்தா சபையினரின் ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவுக்கு பிரம்ஸ்ரீ ந.வீரமணிஐயர், பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

தர்மகர்த்தா சபைச் செயலாளர் செ.சோதிப்பெருமாள் தலைமையில் விழா நடைபெற்றது. பேராசிரியர் சபா. ஜெயராசா தமது உரையில் மேலும் கூறியதாவது:-

சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜ சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள், முத்து சுவாமி தீட்சதம் ஆகியோர் கிருதிகளைப் புனைவதற்கு அவர்கள் காலத்தில் தமிழகத்தில் நிலைகொண்டிருந்த இசைமரபு, பக்திமரபு பெருந்துணை களாயின. இணுவில் கிராமத்து இசை மரபுகளும், பக்தி மரபுகளும் வீரமணி ஐயர் என்ற பெரும் கலைஞரை எமக்குத் தந்துள்ளன.

இணுவில் கிராமம் மட்டுமல்ல அயல் கிராமங்களின் கோயில் தெய்வங்கள் பற்றி அவர் புனைந்துள்ள கீர்த்தனைகள் தமிழ் இலக்கியப் பரப்பையும் இசைப் பரப்பையும் அணி செய்யும் அருங்கலைப் படைப்புகளாக உள்ளன - என்றார்.

நூல்வெளியீட்டுரை வழங்கிய யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் கூறியதாவது:-

எமது பழம்பெருமை வாய்ந்த கலைகளை நூல் வடிவில் காலத்துக்குக் காலம் வெளியிட்டு அவற்றின் பெருமைகளை வெளிப்படுத்துவது எமது மரபு. எமது சமயம் வாழ, பண்பாடு மிளிர நாயன்மார்களால் தேவார திருவாசகங்கள் பாடப்பட்டது போன்று இன்றைய காலத்தில் வீரமணி ஐயாவும் பாடல்களை இயற்றி வருகிறார்.

தெய்வீகத்தன்மை நிறைந்த அவர் எழுதும் பாடல்கள் முருகன் திருவருளால் ஏற்பட்டு நூல்வடிவம் பெறுகின்றன. தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் இசைத் துறைப் பாலமாக அவர் விளங்குகிறார். பல்வேறு ராக தாள அம்சங்களுடன் கூடிய அவரது பாடல்கள் நாம் அனைவரும் இசையுடன் பாடி அனுபவிக்கக் கூடியனவாய் உள்ளன - எனக் கூறினார்.

சங்கீத பூஷணம் நா.வி.மு.நவரத்தினம் பாராட்டுரை வழங்கினார்.

தர்மகர்த்தா சபையினரால் மஹா கவிக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டது.

பக்கவாத்திய சகிதம் மஹாவித்துவான் ந.வீரமணிஐயர், சங்கீதபூஷணம் ஸ்ரீதர்ஷனன் ஆகியோரால் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது.(க-152)

### நாளை

மாசி 05

ஞாயிற்றுக்கிழமை

(17-02-2002)

திதி : பஞ்சமி

முன்னிரவு 11.11 வரை.

நட்சத்திரம் : ரேவதி

பிற்பகல் 1.25 வரை

சுபநேரம் : 9.33 - 11.03

ராகுகாலம் : 5.03 - 6.33

(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சான்றோனுக்கு வரும் தீங்கை அவன் தீங்காக ஏற்பதில்லை.

## நாட்டு நடப்பு

### அப்பா எங்கே போய்விட்டார் அம்மா?

அப்பா ஏங்கேயம்மா? என்று
ஆறு வயதுக் குழந்தை கேட்க
எப்பவோ போய்விட்டார் என்று
ஏதையாள் இரங்கிச் சொல்ல
தப்பாது எனது அப்பா இங்கு
தவறாது வருவாரோ? என்ன
எப்படி சொல்வேன் என்று
ஏங்கியே ஏதையாளும் விம்ம
ஒப்பாரி வைத்து ஓலமிட
ஊரார் சுமந்த படத்தைக் காட்ட
எப்படி பாடை ஏறி அம்மா
என்னப்பா போனார்? என்ன
அப்போது அலறிச் சொன்னாள்
அந்தப் பல்குழல் கொன்றதென்று.

*- விகடகவி.*

# மாணவர்களின் வீதி ஒழுங்கு சைகைகளை மதித்து நடவுங்கள்!

## சாரதிகள், பாதசாரிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.16

மாணவர்கள் மேற்கொண்டு வரும் வீதி ஒழுங்கு சைகைகளை மதித்து நடக்குமாறு 'மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும்' அமைப்பினர் அறிவுறுத்துகின்றனர். மக்கள் நலன்புரிச் சங்கப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவினர் பாடசாலைகளில வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறையை நடத்திவருகின்றனர் என்பது தெரிந்ததே.

மாணவர்களைக் கொண்டே வீதி விபத்து அனர்த்தங்களைத் தடுக்கும் நோக்குடன் பாடசாலை வாயில்களின் முன்பாக இவர்கள் வீதிப் போக்குவரத்துச் சேவையை ஆற்றி வருகின்றனர்.

எனவே மாணவர்களின் இச் சேவைக்கு மதிப்பளித்து அவர்களின் மனதை வேதனைப்படுத்தாதவாறு வாகனச் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் கூடியளவு கரிசனையுடன் நடந்து கொள்ளுமாறு மேற்படி நலன்புரிச் சங்கப் பாதுகாப்புப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர். (க-ரி)

### உதவிப் பணிப்பாளர்கள் முதன்மை ஆசிரியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த ஆங்கில பாட இணைப்பாளர் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்தில் உள்ள ஆங்கில அபிவிருத்தி மையத்துக்கு வருகைதரவுள்ளார்.

ஆகவே மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களையும் சேர்ந்த ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் முதன்மை ஆசிரியர்களையும் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயப் பணிமனை வளவில் உள்ள மாவட்ட ஆங்கில அபிவிருத்தி மையத்துக்கு வருகைதருமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.(க-10)

### சித்திரம், கைப்பணி ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சித்திரம், கைப்பணி பாடங்கள் கற்பித்தல் தொடர்பான கருத்தரங்கு ஒன்று அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் பொருத்தமான ஆசிரியர்களைத் தெரிவுசெய்து அவர்கள் தொடர்பான விவரங்களை இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா சகல அதிபர்களையும் கேட்டுள்ளார். (க-10)

# மனமாற்றத்திற்கான காலம் இது

### தவக்காலச்சிந்தனை

### நான்காம் நாள்

திருமுழுக்கின் ஊடாக நாங்கள் ஒவ்வொருவரும் இறைவனின் சொந்தப்பிள்ளைகள் என்ற உரிமையைப் பெறுகின்றோம். இந்த உரிமையை அபகரித்துக்கொள்கின்றபோதே நாங்கள் ஒளியின் மக்களாகின்றோம். அப்படியென்றால் நாங்கள் மற்றவர்களுக்கு ஒளியைக் கொடுக்கவேண்டியவர்கள். மங்கலான ஒளியைக் கொடுக்கமுடியாது. பிரகாசமான ஒளியைத்தான் கொடுக்கவேண்டும். அதற்கு எமக்குள் இருக்கின்ற இருளை அகற்றவேண்டும்.

எம்மிடமுள்ள குற்றங்குறைகளைப பொருட்படுத்தாமல் அல்லது மறைத்துக்கொண்டு மற்றவர்களைச் சுட்டிக் காட்டுவது, மற்றவர்களைப் பற்றிப் பொல்லாதது பேசுவது, மற்றவர்கள் மீது எரிச்சல், பொறாமை, கோபம் கொள்ளுவது, தீயநடத்தைக்கு மற்றவர்களைத் தூண்டுவது, சிறுவர்களுக்கு இடையூறாக இருப்பது, பொறுப்பற்ற வாழ்க்கை வாழ்வது, சமூகத் தீமைகளுக்கு வழி சமைப்பது, மற்றவர்களுடைய பொருள்கள்மீது ஆசைப்படுவது, வீண் சந்தேகம் கொள்ளுவது, கருக்கலைப்புச் செய்தல், பொருள்களைப் பதுக்கி விலைவாசியைத் தூண்டுதல், சாதியத்தை வளர்த்தல், சீதனப் பேயைப் போசித்தல் போன்ற இருளுக்குரிய செயல்களை நிறுத்தவேண்டும்.

இயேசு கூறுகின்றார், "நேர்மையாளர்களையல்ல பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்" (லூக்.5:32). பாவியை அல்ல பாவத்தையே இறைவன் வெறுக்கின்றார். ஆகவே இருளுக்குரிய செயல்களைவிட்டு ஒளிக்குரிய செயல்களைச் செய்ய நாங்கள் அழைக்கப்படுகின்றோம்.

இதற்கு இந்த நாள்களில் எங்களை நாங்களே தியாகம் செய்ய முன்வரவேண்டும். பசித்தவருக்கு ஒருவேளை உணவு கொடுக்க, வாழ்க்கையில் சோர்ந்துபோனவர்களோடு ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் பேச, மனவேதனையோடு இருப்பவர்களைப் பார்த்து அன்போடு சிரிக்க எங்களைத் தியாகம் செய்யவேண்டும்.

ஏனெனில் ஆண்டவர் கூறுகிறார், "பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால் இருள் நடுவே உன் ஒளி உதிக்கும். இருண்ட உன்நிலை நண்பகல்போல் ஆகும்" (எசா.58:10) எனவே இத்தவக்காலத்தை நாம் எமது மனமாற்றத்தின் காலமாக மாற்ற முன்னின்று செயற்படுவோம்.

**செ.நேசநாயகம்.**
*கொழும்புத்துறை.*

கோப்பாய் வடக்கு. இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலய

நிர்வாக சபை பொதுக்கூட்டம்

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் (23.02.2002) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். புதிய நிர்வாக சபைத் தெரிவு செய்யவேண்டியிருப்பதால் அடியார்கள் அனைவரும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

பொருளாளர்.

(687)



"உலக தமிழோசை"

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' கடல்கடந்தும் கன்னித்தமிழ் மறவா கனேடிய தமிழர்கள் மத்தியில் கலை, பண்பாடு தமிழ்மொழியுடன் பேணப்படுவது யாவரும் அறிந்ததே.

"விளம்பரம்" என்ற பெயரில் கடந்த பன்னிரண்டு வருடகாலமாக மாதமிருமுறை இலவசமாக வெளிவரும் பத்திரிகை என்பதை வெளிப்படுத்துவதில் பெருமை அடைகின்றோம்.

எழுத்தாளர்களின் ஊக்கம், வாசகர்களின் பாராட்டு, வர்த்தகர்களின் ஆதரவு பத்திரிகை வெளிவர ஆதரவு நல்கின்றன. அத்துடன எம்மை இன்னமும் உலகத் தமிழோசை "சஞ்சிகையை" உலகளாவிய ரீதியில் வெளியிட கால்கோள் இட்டுள்ளது. சர்வதேசரீதியில் பல எழுத்தாளர்கள் ஆக்கமும் ஊக்கமும் தருகின்றனர். இதேவேளையில் மேலும் பல ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களையும் எதிர்பார்க்கின்றோம். இந்த ஆக்கங்கள் பலதரப்பட்டவர்களுக்கும் ஏற்றவையாக இருப்பது விரும்பத்தக்கது.

*யாழ். தொடர்புகளுக்கு:-*

இ.செல்வநாதன் (நகுலன்)
நியூ லக்சுமி ரேட்ஸ்,
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி.
T.P.:- 2928

VLAMBARAM PUBLICATIONS,
P.O.Box 37527,
*31, Tapscott Road,*
*SCARBOROUGH, ONTARIO MIB 5P9, CANADA.*

(585)



31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வன்
தம்பிராசா திகழொளிபவன் B.A.
(தமிழ், சமயம், ஆங்கில விற்பன்னரும்
இந்துநாகரிக விரிவுரையாளரும்)

எமது பாசதீபம் ஒளிவீசிப்பிரகாசிக்கும் என்றிருந்தோம். திடீரென்று அது அணைந்துவிட்டது. நாம் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்.

அமரரின் ஆத்மா சாந்தி பெறுக.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்குகொண்டு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், ஆசிரியர், மாணவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரான்பற்று, பண்டத்தரிப்பு. (646) - குடும்பத்தினர்.



நெஞ்சம் கலங்கி நிற்கும்
ஈராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
07 ☆ 02 ☆ 1982



ஆண்டவன் அடியில்
09 ☆ 03 ☆ 2000

செல்வன்
தருமலிங்கம் கருணேஸ்வரன (ஈசன்)
திதி:-16.02.2002

பத்து மாதம் சுமந்து பெற்றபாவி என்வயிறு
பற்றி எரியுதடா என் மகனே! ஈசா உன்னை
தோளில் போட்டு வளர்த்த அப்பா இங்கு இருக்க
நீ ஏனடா தரணியை விட்டுப் போக நினைத்தாய்
ஈசா உன் கனவுகள் எம் நெஞ்சங்களில் நினைவுகளாக.
*உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*மாயக்கை,*
*அல்வாய் வடக்கு, அல்வாய்.* (709)

*உன் பிரிவால் வாடும்:*
குடும்பத்தினர்.


## கண்ணிகள்,மிதிவெடிகளின் விபரீதங்களை உணர்த்தும் நாடகம்!

கோப்பாய்,பெப்.16

கண்ணிவெடி, மிதிவெடி, வெடிக்காத ஷெல், குண்டுகள் போன்றவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாடகம் தற்போது குடாநாட்டில் மேடையேற்றப்பட்டுவருகின்றது

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியோடும் யூ.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தின் ஆதரவோடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நாடகம் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுஇடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இந்த நாடகம்மூலம் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் மீளக்குடியேறுவோரிடம் எச்சரிக்கை உணர்வையும் மாணவர்களுக்கு இது குறித்த அபாய உணர்வையும் ஏற்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(க-72)

## யாழ்.நகர் எரிபொருள் நிலையத்தில் நேற்று ம.ண்ணெய் விநியோகம்

அரியாலை,பெப்.16

யாழ்.நகரில் உள்ள 'மாக்பெட்' எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று பாவனையாளர்களுக்கு மண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

ஒருவருக்கு 10 லீற்றர் என்ற அடிப்படையில் மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

இதேசமயம் ப.நோ.கூ.சங்கங்கள் தமது கிளைகள் ஊடாக பங்கீட்டு அட்டைக்கு மண்எண்ணெய் விநியோகத்தில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-17)

## தையற்பயிற்சி நிலையம் திறப்பு

வலிகாமம் தெற்கு,பெப்.16

வலிகாமம் தென்மேற்கு - சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பெண்களுக்கான தையற்பயிற்சி நிலையம் ஒன்று நவாலி வடக்கில் உள்ள சோமசுந்தரப்புலவர் வீதியில் இயங்கும் பொதுச் சுகாதார பரிசோதகர் பணிமனை கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் நிலையத்தைத் திறந்து வைத்தார். (க-152)

## கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு,பெப்.16

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்துக்கென நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கு, பரீட்சை திணைக்கள உத்தியோகத்தர்களால் நடத்தப்படும். சகல 1ஏபி, 1சி, தரம்11 பாடசாலை அதிபர்கள், ஒவ்வொரு பாடசாலையினதும் எஸ்.பி.ஏ.கண்காணிப்புக் குழுவின் செயலாளர் அல்லது அக்குழுவில் உள்ள சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் தவறாமல் இதில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் -

கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர், விசேட பாட உதவிக் கல்விப் பணிப்பாளர், முதன்மை ஆசிரியர் ஆகியோரும் இதில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

(க-152)

## அங்குரார்ப்பணம்

வலிகாமம் தெற்கு,பெப்.16

வலிகாமம் தென்மேற்கு - சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஏழு கிராம அலுவலர் பிரிவுகளில் இளைஞர் சேவைகள் மன்றங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் விஜயரத்தினம் வினோதினியின் ஏற்பாட்டில் இவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன. (க-152)

## உருளைக்கிழங்கு செய்கையாளர் கூடிய லாபம்

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஈவினை பிரதேசங்களில் இம்முறை உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் பெரும் லாபம் அடைந்துள்ளனர்.

ஒரு அந்தர் விதை உருளைக்கிழங்குப் பயிருக்கு 4 முதல் 6 அந்தர் வரை விளைச்சல் கிடைத்துள்ளது. உருளைக்கிழங்கு தற்போது நல்ல விலைக்கு விற்கப்படுவதால் செய்கையாளர் இம்முறை நல்ல பயனைப் பெற்றுவருகின்றனர். (க-133)

# இராச வீதியைத் திறந்துவிட அமைச்சர் ஆவன செய்ய வேண்டும்

## பாதிக்கப்பட்ட மக்கள் கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.16

பொதுமக்கள் பாவனைக்கு படையினரால் தடைசெய்யப்பட்ட கோப்பாய் தெற்கு - இராச வீதிப் பகுதியை மீண்டும் பொதுப் போக்குவரத்துக்கு திறந்துவிட ஆவன செய்யுமாறு அமைச்சர் மகேஸ்வரனுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மேற்படி வீதித்தடையால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் சார்பாக அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கோப்பாய் தெற்கு இராச வீதியானது கடந்த இரண்டு வருடங்களாக பாதுகாப்புப் படையினரால் மக்கள் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் இவ்வீதியால் அன்றாடம் பயணம் செய்யும் மக்கள் பல்வேறுபட்ட சிரமங்களினை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை கல்வியங்காடு, திருநெல்வேலி சந்தைகளுக்குக் கொண்டுசெல்வதற்கும், பால் உற்பத்திப் பொருள்களை பாற்பண்ணைக்குக் கொண்டுசென்று வருவதற்கும், பாடசாலை மாணவர்கள், பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குச் செல்வோரும் இவ்வீதித் தடையால் பல்வேறுபட்ட சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

எனவே மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு இவ்வீதியினை பயணிகளின் பாவனைக்குத் திறந்துவிடுவதற்குச் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு தங்களால் ஆன முயற்சியை இவ்விடயத்தில் மேற்கொள்ளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வீதியில் இராணுவமுகாம் அமைந்திருந்தும் கடந்த காலத்தில் இவ்வீதி மக்கள் பாவனைக்கு விடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)


மூன்றாம் வருட நெஞ்சகலா நினைவலைகள்

மகிழ வைத்தது
23 - 02 - 1931



நெகிழ வைத்தது
19 - 02 - 1999

திருமதி சரஸ்வதியம்மா செல்வரத்தினம்
*(ஓய்வுபெற்ற ஆசிரியை - ஈவினை அ.த.க.பாடசாலை)*
திதி:16.02.2002 பூர்வபக்கச் சதுர்த்தி

ஆண்டு மூன்று சென்றாலும் - நாம்
அடுத்த பிறவி எடுத்தாலும் விட்டுப் பிரியாது
உங்கள் நினைவுகள் அம்மா!

கணவர்
லயன்.செ.செல்வரத்தினம் *(ஜே.பி.)*
*(ஓய்வுபெற்ற அதிபர்)*
பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர். (712)

*"செல்வம்"*
*ஈவினை.*



31ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
03 - 04 - 1930



உதிர்வு
17 - 01 - 2002

திருமதி சபாலிங்கம் வாலாம்பிகை
(மண்டைதீவு - 6)

அன்பின் ஒளிவிளக்கே!
மந்திரமாய் மறைந்தாயே!
சந்தனத்தின் நறுமணமே!
சிந்தையில் இருளம்மா!
கண்ணீரில் ஒரு திங்கள்
கரைந்து மறைந்ததுவே!
எண்ணாத நாளில்லை
இரங்காத போதில்லை!
மீண்டும் வாராயோ
எம் குடும்ப ஒளிவிளக்காய்?

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (16.02.2002) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் அன்றைய மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அவரது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*265/1, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(இலுப்பையடிச் சந்தி) (729)

*அன்னாரின் பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

| | | | |
|---|---|---|---|
| சந். செவ். | | சனி ரா | வி |
| சூ. ▲ வெ. | இராசிச் | | |
| புத. | சக்கரம் | | |
| | கே. | | |

*மாற்றம்*

**17.02.2002இல் ரேவதி நட்சத்திரத்தில் - மீனராசியில் சந்திரன் நிற்கும்.**

**18.02.2002இல் மேடத்திற்கு செவ்வாய் மாறும்.**

**பேச்சுக்கள் தொடரும். படிப்படியான மாற்றங்கள் ஏற்படும். உலக நாடுகளின் அழுத்தங்கள் மேலும் அதிகரிக்கும். இந்தியாவில் வடக்கில் தீவரவாதச் செயற்பாடுகள் தொடரும். அரசியல் தலைவர்களுக்கு நல்லதல்ல. மேற்கு நாடுகள், மத்திய கிழக்கு, கிழக்கு நாடுகளில் பொருளாதார அழுத்தங்களைச் செயற்படுத்தும். பசுபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கை அழிவுகள் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டு கின்றன.**

# இந்த வார இராசி பலன்

# 17.02.2002 ~ 23.02.2002

## மேடம்

ஆணுக்கும் ஒருமனம்தான் - பெண்ணுக்கும் ஒருமனம்தான். புரிந்துணர்வு - புரியாமல்விட்டால் பிரிவுத்துயர் வரத்தான் செய்யும். எதையும் நிதானத்துடன் செயற்பட்டால் நன்மைவரும் எனச் சிந்திப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும். பொருள்வரவு அதிகரிக்கும். வீடுமனைச் செலவுகள் சர்வசாதாரணம். புதிய நட்புவரும். வயிற்றுவருத்தம், கைகால் விறைப்பு, சல,மல வருத்தங்கள், தலைவலி, மனப்பயம் என்பன வரும். பிரயாணத்துறை, மருந்துத்துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.*

## இடபம்

ஒரு சாட்டுக்கு வாழ்வதும் - எந்த அலுவல்களைச் செய்து வாழ்வதும் இப்பொழுது மனிதவாழ்வில் சர்வசாதாரணமாகிவிட்டது. இதனால் ஒருவர்மீது மற்றவர்களுக்கு நம்பிக்கையீனம் வளர்கின்றது. கட்டுப்பாடற்ற வாழ்வு தாமரை இலைத் தண்ணீர் போன்று எப்பொழுதும் தத்தளித்த நிலைதான் - தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை, மனக்குறைகள், அலட்சியத் தன்மை ஏற்படும். பொருள் வரவு வந்தாலும் செலவு கட்டுமீறும். இனசனக் கொண்டாட்டம் என்பன வரும். சிறுநீரக வருத்தம், மூட்டு நோ, சளி, சலவருத்தம் என்பன வரும். சட்டத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.*

## மிதுனம்

மனிதர்களுக்குப் பதினாறு பாவங்களின் அடிப்படையிலேயே பிறவியின அசைவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றது. அதனால்தான் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என வாழ்த்துகின்றார்கள். கணவன் மனைவிக்குப் பதினாறு பாவத்திற்கு மேற்பட்டால் பிரிவு ஏற்படும் எனச் சோதிட தர்மம் கூறுகின்றது. நீங்களும் ஒருகட்டுப்பாட்டுடன் தொழில்ஸ்தானத்தில் செயற்படுவீர்கள். அவசரத்தில் பல பிழைகள் விடுவீர்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். தலைவலி, மலச்சிக்கல், முதுகு, கைகால் வலி, சளி என்பன வரும். செய்தித்துறை, சங்கீதத்துறை, குருத துறை, கமிஷன் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள்.*

## கடகம்

உழைப்பாளிகள் என்றும் உழைத்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். எனவே உழைக்கும் சிந்தனையுள்ள நீங்கள் தொழில்ஸ்தானத்தில் போராடியபடி இருப்பீர்கள். அரசியல்வாதிகள் இது முடியாது எனச் சொல்ல மாட்டார்கள். ஆனால் எதையும் திமரென முடித்துக்கொடுக்க மாட்டார்கள். அதுபோல நீங்களும் செயற்பட நினைக்கலாம். மாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். படபடப்பு, சலவருத்தம், கைகால், மூட்டு வலிகள், மனமாற்றம் என்பன வரும். அரசியற்றுறை, மருத்துவத்துறை, செய்தித்துறை, வங்கித்துறை வியாபாரத்துறை, குருத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகளும் மாற்றங்களும் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், சனி.*

## சிங்கம்

தர்மத்திற்காகப் போராடும் பாதை நீண்டுகொண்டு போனாலும் போகட்டும் தொடர்ந்து நாமும் சென்றுகொண்டு இருப்போம் என அடிக்கடி எண்ணுவீர்கள். தொழில்ஸ்தானத்தில் மறைமுக அழுத்தங்கள் வரலாம். பிடிவாதம் வெற்றிதரும். வருவாய்கள் அதிகரிக்கும் - தூரத்துச் செய்திகள் - சகோதரர்கள் உதவிகள், வீடு மனைச் சிறப்பு - வீடுவாகன யோகம் உடையவராகவும், அரச உதவிகள் வரும். இடமாற்றம் - பிரயாணங்களைத் தவிர்க்கவும். நெஞ்சுவலி, நாரிப்பிடிப்பு, உஷ்ணபீடைகள், தொண்டை வருத்தம் என்பன கொடுக்கும். போக்குவரத்துத்துறை, மருந்துத்துறை, கமிஷன்துறை, கடல்துறை, குருத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

## கன்னி

நன்றி என்பது இடைவழித் தூரத்தில் நின்றுவிடக்கூடியதல்ல - இறுதிவரையும் தொடர்ந்து சென்றுகொண்டிருக்கும் ஒருமன உணர்வு அலைதான் அதுவாகும். தொழில்ஸ்தானத்தில் நன்றிகெட்டத்தனமான செயல்களைச் சிலர் செய்து மனக்கஷ்டம் கொடுப்பர். சகோதரர்களுக்காக ஓடியாடித் திரிவர். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். பூர்வீகப் பலன் தொடுக்கும். எதிர்ப்பாளரால் சில கஷ்டங்கள் வரும். இடுப்புவலி, கிருமித்தாக்கம், மூலநோய், இரத்தவருத்தங்கள் என்பன வரும். பண்ணைத்துறை, வணிகத்துறை, ரீ.வீ., டெக், செய்தித்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, சனி.*

## துலாம்

அமைதியற்ற மனம் அலைகள் போன்றது. ஏமாற்றத்தின் விளிம்பு போராட்ட உணர்வுகளை மனிதர்களில் பிரதிபலிப்பது தவிர்க்கமுடியாதது. தொழில்ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும். தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைத்தரும். பணக்கஷ்டம் வரலாம். புதிய பொறுப்புக்கள் வந்துசேரும். தலைவலி, குடல உபாதை, நரிநோ, மனப்போராட்டம் என்பன வரும். சகோதரர் உதவிகள் என்பன கிடைக்கும். குருத்துறை, செய்தித்துறை, இசைத்துறை, வியாபாரத்துறை, நகைத்துறை, புடைவைததுறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள் ஞாயிறு, வெள்ளி, சனி.*

## விருச்சிகம்

பதவியில் உயர்ந்தவர்கள் உறுதி உடையவர்களாக இருக்கவேண்டும். மற்றவர்கள் மீது பழிகளைப் போட்டு விட்டுத் தாங்கள் தப்பிவிடப் பார்ப்பவர்களையே இப்பொழுது பல இடங்களில் காண்கின்றோம். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி கோபிப்பீர்கள். பொருள் வரவு இருக்கும். சகோதரம் அல்லது புத்திரருக்காக அலுவல்கள் பார்ப்பீர்கள். கூட்டாளிகளால் நன்மைகள் வரும். அரச உதவி, அரசியல்வாதிகளால் உதவிகள் என்பன நடக்கும். நெஞ்சுச்சளி, நாரிநோ, இரத்த அழுத்தம் என்பன இருக்கும். தொழில்நுட்பத்துறை, இரசாயனத்துறை, பாதுகாப்புத்துறை, வங்கித்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு வெள்ளி சனி.*

# மகாதேவா ஜோதிடம்

## தனுசு

நீதிக்காகப் போராடிப் பலனை எதிர்பாராத உள்ளத்தைக் கொண்ட நீங்கள் அடித்தாலும், அதனால் பலர் நன்மை அடையச் செய்வார்கள். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் பல செய்வீர்கள். பதவியில் உயர்ந்தவர்கூட உங்களிடம் ஆலோசனைக்காக வருவார்கள். தொழில் பீடத்தில் கடும் வசனம், பொருள் வரவு, குடும்பச் செலவு, வீட்டில் சிறப்பு, வாகன யோகம், கலகலப்பு, தூரத்துச் செய்தி, அரச உதவி, மேலதிகாரிகள் ஆலோசனை என்பன நடக்கும். எலும்பு நோ, நாரிப்பிடிப்பு, சளி என்பன வரும். நகைத்துறை, புடைவைத்துறை, செய்தித்துறை, போக்குவரத்துத்துறை, இசைத்துறை, குருத்துறை போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி, சனி.*

## மகரம்

நண்பர்கள் பலர் செய்யும் குற்றங்கள் உங்கள் தலைமேல் வீண் பழியாக மாறி வேதனைதரச் சந்தர்ப்பங்கள் உண்டு. தொழில்ஸ்தானத்தில் பலவித கருத்துமாற்றம். குடும்பத்தில் கருத்து வேற்றுமை, பொருள் செலவு, இடம்பீகச் செலவு, வீடு, வாகன யோகம், சகோதரருக்காக ஓடியாடித் திரிதல் என்பன நடக்கும். நரம்புப் பலவீனம், மனக்குழப்பம், மூட்டுவலி, விறைப்பு என்பன வரும். எண்ணெய்த்துறை, பிரயாணத்துறை, பலசரக்கு வியாபாரம், மதத்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் - நன்மைகளும் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள் திங்வெள்ளி, சனி.*

## கும்பம்

மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருட்டிப் பாயும் என்பார்கள். மலைகளை உருட்டிப்பாயாது எனச் சொல்லமுடியாது. நீங்கள் எப்படிப்பட்டாவது உங்கள் அலுவல்களைச் சாதனைப்படுத்தப் பார்ப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் புதிய பொறுப்பு, அதிகாரிகளுடன் கருத்து வேற்றுமை, தகுதிக்குக் கீழ்ப்பட்ட செயல், கடும் கோபம், வீண்வழக்கு அல்லது விசாரணையால் தொல்லை என்பன கொடுக்கும். தொண்டை வரட்சி, பயம், கால்வீக்கம், மறதி, சளித்தொல்லை என்பன கொடுக்கும். பாதுகாப்புத்துறை, ஹோட்டல்துறை, இசைத்துறை, ரீ.வி., டெக், கம்பியூட்டர்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், சனி.*

## மீனம்

சொந்தபந்தத்தவர் கூடுவர் பணமிருந்தால் - பணம் கரைய அனைவரும் கலைந்தவர்கள் பாசத்தை, நேசத்தைப் பற்றி மறந்திடுவர். ஆனால அதைமீறியும் சிலர் இவ்வுலகில் இல்லாமல் இல்லை. தொழில் ஸ்தானத்தில் பணவரவு, அரச அதிகாரிகள் உதவி, கடும் பேச்சு, அலட்சியத தன்மை, குடும்பத்தில் கலகம், சகோதரர்களுடன் கருத்துவேற்றுமை, போட்டிகளில் வெற்றி என்பன நடக்கும். இடுப்புவலி, சளி, காய்ச்சல், இரத்த நோய் என்பன வரும். செய்தித்துறை, ரீ.வி., டெக், கொம்பியூட்டர், நகைத்துறை, மருந்தத்துறை, குருத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், சனி.*

# ஜேபி மாஸ்டர்

கூட்டுறவுத் தந்தை என மதிக்கப்பெற்றவரும், ஒருகாலத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியாக விளங்கியவருமான அமரர் வீ.வீரசிங்கம் அவர்கள், நாம் மாணிப்பாய் இந்துக் கல்லூரியில் எமது கல்வியைத் தொடங்கிய காலத்தில் அதன் அதிபராக விளங்கியவர். அவர் காலத்திலும், அதன் பின்னர் அதிபராக விளங்கிய முத்துவேற்பிள்ளை காலத்திலும் அங்கு ஒழுக்க வாத்தியாராக (DISCIPLINE MASTER) விளங்கியவர்தாம் இந்த ஜேபி மாஸ்டர். "ஜேபி" என்றதும் நீங்கள் அவரைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. அது அவரின் பெயருக்குப் பின்னால் அல்ல, முன்னுக்குத்தான் இருந்தது. அதாவது அவரது பெயர் J.P நாகலிங்கம் என்பது...

வீரசிங்கம், செல்லமுத்து விளையாட்டரங்கப் பக்கத்திலிருந்து கல்லூரிக்குக் குடை பிடித்தவாறு நடந்து வருவார் ஜேபி மாஸ்டர். சந்தை கிழக்கு ஒழுங்கையிலுள்ள தமது வீட்டிலிருந்து ஒரு 'பார்' இல்லாத சைக்கிளில் ஓடி வருவார். அவர்களின் வருகையை வைத்தே மணிக்கூட்டு முள்ளைத் திருப்பிச் சரி செய்து கொள்ளலாம். அவ்வளவிற்கு அவர்கள் 'பங்சுவாலிட்டி'க்குப் பெயர் பெற்றவர்கள். அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள் என்றால்... அந்தப் பயணம் யாருக்காகவும் நிற்கமாட்டாது. அப்படி அதில் குழுக்கிடும் துணிச்சலும் எவருக்கும் இருக்காது. அவர்கள் தங்களுக்கென வகுத்துக்கொண்ட ஒரு குறிப்பிட்ட கோட்டில் நடப்பது



போலவும், ஓடுவது போலவும்தான் இருக்கும். அவர்களின் தலைகளைக் கண்டால் மாணவர்கள் எவரும் அநாவசியமாகத் தெருவோரங்களில் நிற்கமாட்டார்கள். வகுப்பறைக்களுக்குள் ஓடி ஒளிந்து விடுவார்கள். ஏன் ஏனையவர்கள்கூட 'சிங்கர்' வருகிறார். 'ஜேபியர்' போகிறார் என்றால மரியாதையுடன் வழிவிட்டுக் கொடுப்பார்கள்.

அதிலும் அந்த ஜேபி மாஸ்டர் சைக்கிளில் வருவது மிகவும் வேடிக்கையாக இருக்கும். அவர் சைக்கிளில் ஓடும்போது கூட வாகனப் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை. அவர் இடதுபக்கம் திரும்பப் போகிறார், வலதுபக்கம் திரும்பப் போகிறார், நேரே போகப்போகிறார், பின்னால் வருகின்ற வாகனத்திற்கு முந்திச்செல்ல வழி விடுகிறார், தாம் சைக்கிளை நிறுத்தி இறங்கப்போகிறார் என்பவைகளுக்கெல்லாம் கைகளால் அவைகளுக்குரிய சமிக்ஞைகளைக் கொடுத்துக்கொண்டே செல்வர். பொலீஸாரைக் கண்டால் சைக்கிளில் 'டபிள்' போகிறவர்கள் அக்காலத்தில் குதித்து இறங்கிவிடுவதுபோல மாணவர்கள் ஜேபி மாஸ்டரைக் கண்டாலும் குதித்து இறங்கிவிடுவார்கள். அப்படி ஒரு பயம் கலந்த மரியாதை அவருக்கு இருந்தது. அதிபர் வீரசிங்கத்துடன் ஒப்பிடும்போது ஜேபி மாஸ்டர் ஒரு சிறிய மான் (MAN) தான்.

கல்லூரியானது கட்டிம்சன் மண்டபத்தில் அதிபர் வீரசிங்கம் நடத்தும் பிரார்த்தனைக் கூட்டத்தையடுத்து நடைபெறும் காலைத்தூக்கி நின்றாடும் நடேசப்பெருமானுக்குரிய வழிபாட்டு நிகழ்ச்சியாக அது தொடங்கினாலும் சர்வமதப் பிரார்த்தனை போலவுமிருக்கும்...

இதேவேளை ஜேபி மாஸ்ரரும் மிக நீளமான ஒரு பிரம்புடன் தமது அலுவலக அறையிலிருந்து ஒரு துள்ளலுடன் இறங்கிவந்து தரையில் நின்றுகொள்வார். அவரது அறையும் கல்லூரி நுழைவாயிலும் சற்றுத் தூரமானாலும் எதிர்எதிராகவே அமைந்திருந்தது. கல்லூரிக்குத் தாமதமாக வருபவர்கள் எவரும் அவரது பார்வையிலிருந்து தப்பிவிடமுடியாது. அவருக்கு ஒளித்து பிரார்த்தனை மண்டபத்துக்குள்ளோ வகுப்புகளுக்குள்ளோ நுழைந்துவிடமுடியாது. அவர் பெயர் சொல்லி அழைக்காவிட்டாலும் என்ன மான் (MAN) வா மான் (MAN) என அழைத்து, பிரம்பை அதன் நடுப்பகுதியில் பற்றியவாறு அவர்களுக்கு 'பிரப்பம் பழம்' 'வழங்குவார்'. அவரிடம் அப்படித் தண்டனை பெறுபவர்கள்கூட அவர்மீது கோபமோ, குரோதமோ கொள்வதில்லை. அவர் பிரம்பைக் கையாளுகிற முறையால் தாங்கள் மட்டுமல்ல, அவர்கூடத்தான் அடிபடுகிறாரே என்ற அனுதாபம் காரணமாக இருக்குமோ?

வீரசிங்கத்தார் பிரார்த்தனை முடிந்ததும் அங்கு மேல் நாட்டு பத்திரிகை வியாபாரம் ஒன்றைப் பின்பற்றி இன்னொரு நல்லொழுக்கத்தையும் மாணவர்களிடையே அறிமுகம் செய்ததுண்டு. நடேசர் படம் வைக்கப்படும் அந்தச் சட்டத்திலே ஒரு கரும்பலகையை மாட்டி அதில் விலைப்பட்டியில் ஒன்றை எழுதச்செய்து அதற்கு முன்னால் உள்ள மேசையில் கொப்பி, பென்சில் போன்றவைகளை அடுக்கி வைத்து அதற்குப் பக்கத்தில் ஒரு 'சோக்' வெற்றுப்பெட்டியையும் வைக்கச் செய்திருந்தார். மாணவர்கள் எவர் வேண்டுமானாலும் தங்களுக்கு வேண்டியவைகளை எடுத்துக்கொண்டு, அதற்குரிய பணத்தை 'சோக்' பெட்டிக்குள் போடவேண்டியது.....

வீரசிங்கத்தார் தம்முடன் பிரம்பு வைத்திருந்த போதும் அதனைப் பாவித்ததாகத் தெரியவில்லை. அதுதான் அவரின் பார்வையொன்றே போதுமே! தவிர அந்தக் கவலையும் அவருக்கு இருந்திருக்காது.... அது தான் அதையெல்லாம் கவனிப்பதற்கென்றே பாதுகாப்பு அமைச்சர்போல ஜேபி மாஸ்டர் இருந்திருக்கிறாரே.... அக்கல்லூரி மாணவர்கள் எங்கிருந்தாலும் ஒழுக்கமும் ஒழுங்கும் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்றால், அதற்கெல்லாம் காரணம் அவர்கள் போட்டுவைத்த அத்திவாரம்தான் காரணமாகவிருக்கும்.

ஜேபி மாஸ்ரர் சுகாதாரமும் சரீரவியலும் (HYGIENE & PHYSIOLOGY) பாடமும் அங்கு நடத்திவந்தவர். அத்துடன் உடற்பயிற்சி விளையாட்டுத் துறைகளுக்கு பொறுப்பாக இருந்தவர். இந்த இடத்திலே இன்னொரு தகவல் -

அப்போதெல்லாம் அக்கல்லூரிக்கு பல மைல்கள் தூரத்தில் இருந்தெல்லாம் மாணவர்கள் கால் நடையாகவே வந்துபோனார்கள். இன்னும் சிலர் தண்ணீர் கட்டியும் துலா மிதித்தும் தங்கள் பெற்றோர்களின் விவசாய முயற்சிகளுக்கு உதவி செய்துவிட்டும் வருவார்கள். வேறுசிலர் விடுமுறை நாள்களில் 'வால்கத்து' கட்டக்கூடப் போவார்கள். இப்படியெல்லாம் கடுமையாக உழைத்துவிட்டு படிக்கவென்று வருபவர்களுக்கு உடற்பயிற்சி வேறு வேண்டுமா?

நவாலியைச் சேர்ந்த ஆசிரியர் நகுலேசன் ஆவியுலகத்தாரோடு பேசிய அனுபவம் உள்ளவர். எங்களுக்கு ஆசிரியராக இருந்தவர். அவர் அப்போது இப்படியும் ஒரு நையாண்டி செய்ததுண்டு. "எங்கட பிள்ளைகளுக்கு இருக்கிற உடற்பயிற்சி போதாதென்று இந்த ஜேபியன் பிறகும் அதுகளை வெயிலுக்க நிறுத்தி வருத்துகிறானே...?"

– *சுண் அங்கிள்.*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடைய வேண்டுமா? கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அடிப்படை அறிவில் இருந்து கற்பிக்கப்படும். O/L, 10,9,8,7,6. இல. 8, பிள்ச்சஸ ஒழுங்கை, சுண்டுக்குளி. (மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்.) (C/20657)

வகுப்பு 8 - 11 வரை ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்கள் அனுபவம்மிக்க ஆசிரியரினால் கற்பிக்கப்படும். தனியாகவோ, குழுக்களாகவோ, தபால் மூலமோ, நேரிலோ பயின்றுகொள்ளலாம். தொடர்பு:- விளம்பர இல.1457,மே/பா உதயன், யாழ்ப்பாணம். (529)

(O/L) Maths இல் 37 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் தரம் 6 இலிருந்து (O/L) வரை ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (540)

## ஆங்கிலக் கல்வி

ஆண்டு 6 தொடக்கம் மேல்படிப்பு வரை ஆங்கில இலக்கணம் வினா-விடை, கதைக்கப் பயில நவிக்கினேஸவரன் ஆச்சாரி, இல.426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை.(723)

## ஒத்துமாறல்

யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரிக்கு ஆரம்பக் கல்விக்கான அனுமதி பெற்ற (2002) மாணவர் எவராயினும் மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிக்கு ஒத்துமாறிச் செல்ல விரும்பினால் உடன் தொடர்புகொள்ளவும். வி.இல.1464, மே/பா உதயன். யாழ்ப்பாணம். (705)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1974 ஆம் ஆண்டு, கார்த்திகை 4ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமுள்ள, அரச எழுதுநராகக் கடமையாற்றும், 5'உயரமுள்ள, அழகிய மணமகளுக்கு தகுந்த, படித்த, தொழில்பார்க்கும், நற்குணமுள்ள மணமகன தேவை. தொடர்பு: விளம்பர இல. 1459, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (571)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1971இல் பிறந்த, லக்கினத்தில் செவ்வாய்த் தோஷமுள்ள, கிரகபாவம் 44 கொண்ட, ஆசிரியைக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். பதிவுகள் இலவசம். தொடர்பு: அம்பாள் திருமண சேவை, 419, கோயில் வீதி, நல்லூர். (9.30 - 5.30) (743)

## தவறிவிட்டது

முல்லைப்பிலவு, காரைநகர் என்ற முகவரியையுடைய வைசோதீஸ்வரன என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை (கறுப்பு நிறம்) ஆறுகால்மடம், மயிலு வீதி, ஆனைக்கோட்டைப் பகுதியில் 11.02.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவாஸ் நகை மாடம், இல.8, கன்னாதிட்டி (சிவன் கோயில் முன்பாக) எனும் முகவரியில ஒப்படைத்துதவவும். (676)

"கல்வாரி"அன்னம்மாள் கோயிலடி மானிப்பாயைச் சேர்ந்த அனமோரி மார்சலினின் தேசிய அடையாள அட்டை (இலக்கம் 517391689V) யாழ். நகருக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (724)

---

மாதகல் (கடற்கரை)

## புனித லூர்து அன்னை திருவிழா

(16-02-2002, 17-02-2002)

இன்று (16-02-2002) சனிக்கிழமையும்
நாளை (17-02-2002) ஞாயிற்றுக்கிழமையும்
மாதகல் புனித லூர்து அன்னை திருவிழா நடைபெறும்.
இன்று (16-02-2002) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு
நற்கருணை விழா தேர்ப்பவனியுடன் ஆரம்பமாகின்றது.
நாளை (17-02-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு
திருவிழாத் திருப்பலி நடைபெறும்.
பக்தர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாதகல். (733) - *பங்குத் தந்தை, பங்கு மக்கள்.*

---

உ

"கல்வியே கண்"

யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்

## கலைவிழாவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும்

*காலம்:* இன்று (2002.02.16) சனிக்கிழமை
பி.ப.1.30 மணி (இலங்கை நேரம்)
*இடம்:* பாடசாலை மண்டபம்
*தலைவர்:* திரு.சி.சிவச்செல்வம் *(வித்தியாலய அதிபர்)*
*பிரதம விருந்தினர்:* திரு.வே.தி.செல்வரத்தினம்
*(கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)*
*சிறப்பு விருந்தினர்கள்:* திரு.சி.புஸ்பலிங்கம்
*(உதவிக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)*
திரு.சி.சண்முகம் *(கணக்காய்வாளர்)*
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,
பா.அ.ச., ப.மா.ச., நலன்புரிச்சங்கம்.

*விளம்பர அன்பளிப்பு:*

**சண் விக்கி புடைவையகம்**

*யாழ். வீதி,* (746) *உடுப்பிட்டி.*

---

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் சக மாணவன் செல்வன் க.உதயராஜா
அவர்களின் அன்புச் சகோதரி

### கந்தையா தயாபரி

அவர்கள் 13.02.2002 இயற்கையெய்தியமையையிட்டு நாம் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- 2ஆம் வருட
யாழ்.பல்கலைக்கழகம். (742) விஞ்ஞான பீட மாணவர்கள்.

---

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள், வெள்ளைக் கற்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்) (639)

PIONEER BOX (4 WAY) SONY T.V KU 2511, 2062, 2090, டெக் SR. 38 LG, G.30 FISHER AMP CA 150W என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 351, கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (696)

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் ஒவ் (F) செற் LEGAL SIZE மெசின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சொ.விமலன், 593,பருத்தித்துறை வீதி, (யாழ். மாநகரசபை அருகில்) நல்லூர், யாழ்ப்பாணம். (721)

நல்ல நிலையில் உள்ள வீடியோ புறொஜெக்ரர் விற்பனைக்கு உண்டு. உயர்கல்வி நிறுவனங்கள், மினி சினிமாக்களுக்கு ஏற்றது. தொடர்பு: கு.விக்னேஷ், 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C/20759)

SONG (யப்பான்) டெக் புதியது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.துஷ்யந்தன், பொன்னாலை வீதி, மானிப்பாய். (சந்தியிலிருந்து 500m தூரம்) (747)

முற்றாகச் சீரமைக்கப்பெற்ற சொந்தப்பாவனையிலுள்ள LML (VESPA) ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சு.கமலநாதன், நாகபூஷணி வீதி, கோண்டாவில் கிழக்கு. (745)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குளாய் வீதியில் பிரயோசனங்களுடன் தனிக்கிணறு உடைய 7 1/2, 10 1/2 பரப்புக் காணியில அமைந்த இரண்டு வீடுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் இல்லை. தொடர்பு: 553135 கொழும்பு, திருமதி ச.வீரவாகு, 'கோகுலம்' சண்டிலிப்பாய வடக்கு. (C/20697)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (637)

தரமான புறொயிலர் கோழிகள் சுத்தம் செய்து 1/2 கிலோவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். 18.02.2002 திங்கட்கிழமை பிறிமா, புறொயிலர் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். தொடர்பு: 227, பிறவுண் வீதி, (நரிக்குண்டுக்கு அருகில்) யாழ்ப்பாணம். (740)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், விறாத்துக் குஞ்சுகள், கல்பேட்ஸ், சிறுசேவல்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வெ.சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய். (744)

## கலந்துரையாடல்

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலுக்கு வருகை தரும்போது போட்டிகளில் பங்குபற்றவுள்ள விளையாட்டு அணிகளின் விவரங்களையும் கொண்டு வருமாறு நல்லூர் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.காங்கேயன் அறிவித்துள்ளார். (க-10)

## சனசமூக நிலைய நிர்வாகிகளின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலில் யாழ். மாநகரசபைப் பகுதிக்கான சனசமூக நிர்வாகிகளின் கலந்துரையாடல் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர், நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடல் முதலில் இன்று சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-10)

---

## இலவச கண்பரிசோதனை

மானிப்பாய் கோயிற்பற்று அரிமாக்கழகம் நடத்தும்
கண்பரிசோதனை முகாம்

*இடம்:* நவாலி மகா வித்தியாலயம்
*திகதி:* நாளை (17.02.2002) ஞாயிற்றுக்கிழமை
*நேரம்:* காலை 9.00 மணிமுதல் 11.30 மணிவரை
*கண்பரிசோதனை:* J.S.A.Fernando M.J.F. & சகோதரர்.

தலைவர்,
(732) *மானிப்பாய் கோயிற்பற்று, அரிமாக்கழகம்.*

---

## Jaffna College Institute of Technology

Vaddukoddai, Jaffna, Sri Lanka

**STUDENTS ARE WELCOME**

**for the following courses Which Commence on 18th February 2002**

**Diploma Course**

- Diploma in Computer Programming & Data Processing *Duration: 1 Year (full time)*

**Certificate Courses in Business & Scientific Applications**



- MS Word
- MS Excel
- MS Access
- MS PowerPoint
- Visual Basic 6.0
- FoxPro
- JAVA
- C/C++
- Pascal
- dBase III+

Note:- *Duration: 3 - 4 Months*

- ☑ Open University Exemption for our Diploma Courses
- ☑ Our Diploma Guide the students to the Examination of the following bodies.
  - ☑ Australian Computer Society (ACS)
  - ☑ British Computer Society (BCS)
- ☑ Facilities: Library, Hostel & Sports

**Application forms are available at**

- JCIT, Vaddukoddai
- Undergraduate department, Jaffna College (Hospital Road, Jaffna)

(C/20757)

**Director**
JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY, *Vaddukoddai,*

---

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 - 07 - 1930



மறைவு 18 - 01 - 2002

### அமரர் அப்பையா இராஜசிங்கம்

18.01.2002 அன்று இறையடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்றையதினம் துயர்செய்தி கேட்டு ஓடிவந்து ஆறுதல் கூறி பேருதவிகளைச் செய்தோருக்கும் 19.01.2002இல் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எங்கள் உள்ளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், நாளை (17.02.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறஇருக்கும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*மாறாத்துயரில்:*
குடும்பத்தினர்.

*உடுப்பிட்டி வீதி,*
*தொண்டமனாறு.* (756) தகவல்: **வாமதேவன்.**

---

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை கந்தசாமி

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை, உவர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை கந்தசாமி 11.02.2002 திங்கட்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - இரத்தினப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் உதயகுமார் (சுன்னாகம்), சந்திரமதி (சுவீடன்), இந்திராணி (சுவிஸ்), கலாதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, வைத்திலிங்கம் மற்றும் நவரத்தினம் (சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தி, காலஞ்சென்ற அரியராசா, வில்வலிங்கம் (சுவிஸ்), தெய்வேந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் கார்த்திகா, கஜீதா, துஷாந்தினி, சீராளன், பிரமிலா, சாயிராம், கஜானி, கபி, சமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2002) சனிக்கிழமை 12, கோணேசபுரம், உவர்மலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12, கோணேசபுரம்,*
*உவர்மலை, திருகோணமலை.* (752) தகவல்: குடும்பத்தினர்.

# சமாதான முயற்சிகளில் ரணிலின் மெதுவான, சீரான நகர்வுகள்!

**சமாதான முயற்சிகளை சந்திரிகாவின் அரசும் மேற்கொண்டது. தற்போது ரணிலின் அரசும் மேற்கொண்டு வருகிறது. சமாதான முயற்சிகளின் வெற்றி தோல்வி, சாதக பாதகங்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. சி.ஜே.அமரதுங்க என்பவரால் எழுதப்பட்டு 'ஞாயிறு லங்காதீப' பத்திரிகையில வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## மக்களின் நம்பிக்கை, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறிவிட்டார் சந்திரிகா

**வேறு** ஏதாவது இல்லாவிடினும் சமாதானத்திற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்பதே புதிய அரசின் நடவடிக்கைகளை ஆராய்ந்து வரும் பலரின் கருத்தாகும். அதே நேரம் அரசியல் பேச்சுக்களின் தொனிப் பொருளாக அமைவது சமாதானத்தை ஏற்படுத்தும் ஆற்றல் ரணிலுக்கு உள்ளதா என்பதேயாகும். கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பம் இதுவே எனச் சிலர் கூறுகின்றனர். எனவே எவ்வாறாயினும் சமாதானத்தை உருவாக்குவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே அதன் கருத்தாகும்.

ஐ.தே.முன்னணி வெற்றி பெற்று ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றது, கடந்த பொதுத்தேர்தலை அடுத்தேயாகும். ஐ.தே.முன்னணிக்குக் கிடைத்த வெற்றியானது சமாதானத்திற்குக் கிடைத்த வெற்றி என உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அவதானிகள் தெரிவித்தனர்.

யானை - புலி கூட்டு என பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பியும் மேற்கொண்ட பிரசாரங்களைத் தோல்வியடையச் செய்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டு சமாதானத்தை ஏற்படுத்துவது என்ற ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்கு வெற்றிவாய்ப்பைத் தேடித்தந்த முடிவாக தேர்தல் முடிவுகள் அமைந்தன. சிஹல உறுமய மற்றும் பூமிபுத்ர கட்சி ஆகியன அடைந்த படுதோல்விகள் மேலும் இதை உறுதிப்படுத்தின.

தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த சக்தியின் உண்மை வடிவத்தையும் சமாதானம் தொடர்பாக அதற்குள்ள ஆற்றலையும் தற்போது நாம் அளவிட வேண்டும். இந்நோக்கத்துக்காக - ஒப்பீட்டுக்காக அண்மைக்காலச் சம்பவமாக 1994இல் சந்திரிகா குமாரதுங்கவும் அவரது தலைமையிலான பொ.ஐ.முன்னணியும் ஆட்சியைக் கைப்பற்றிய நேரத்தில் நிலவிய நிலைவரத்தை எடுத்துக்கொள்ளலாம்.

அன்று சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்கு வந்தது சமாதானத்துக்கான அர்ப்பணிப்பு மற்றும் புகழுடன் கூடிய அரசியல் வரலாற்றின் பின்னணியிலேயாகும். அவர் தொடர்ந்து இனவாதத்துக்கு எதிராக - இன ஒற்றுமைக்காக செயற்பட்ட பெண்மணியாக விளங்கினார். அவரது கணவர் சமாதானத்தைத் தேடி யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் சென்றார். பேச்சுக்களையும் மேற்கொண்டார்.

அந்தத் தம்பதியினரைப் போலவே அவர்களது கட்சியான ஸ்ரீலங்கா மக்கள் கட்சியும் அக்கட்சியின் தலைமையின்கீழ் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்காகவும் அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அரசமைப்புக்காகவும் பாடுபட்டன.

### விஜயகுமார தூங்க படுகொலை

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கும் மாகாண சபை முறைக்கும் ஒத்துழைப்பு வழங்கும் போக்கை அனுசரித்ததால் அக்கட்சியின் அப்போதைய நாட்டுப்பற்றாளர்களின் (ஜே.வி.பி.) கடுஞ்சினத்திற்கு உள்ளாகினர். இதன் காரணமாக விஜயகுமாரதுங்கவும் அவரது கட்சியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோரும் படுகொலை செய்யப்பட்டனர்.

சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்கு வந்தது சமாதானத்துக்காக உயிர்த்தியாகங்களைச் செய்த சக்திகளின் தலைவி என்ற, கௌரவத்துடனும் நம்பிக்கையுடனுமேயாகும்.

ஆட்சிக்கு வந்தபோது அவருக்குத் தலைமைப் பதவியை வழங்கியது இனவாதக் கட்சியாகச் செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகும். அந்தக் கட்சியில் சந்திரிகாவுக்குப் பிரதிவாதியாக விளங்கியவர்கள் அவரது சகோதரனான அநுரா பண்டாரநாயக்காவின் அனுதாபிகளான "ஹெல உறுமய" என்னும் இனவாதக் குழுவாகும். அந்த இனவாதச் சக்தியைத் தோற்கடித்து சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது சந்திரிகாவுக்கு சவாலாக அமைந்தது.

### சந்திரிகாவுக்குக் கிடைத்த அங்கீகாரம், ஒத்துழைப்பு

சமாதானம் தொடர்பான சக்திகளுடன் அவருக்கு இருந்த தொடர்புகள் இவை அனைத்தையும் விட அவருக்கு பெரும் சக்தியாக அமைந்தது. ஒருபுறத்தில் இடதுசாரிக் கட்சி மறுபுறத்தில் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகள். மற்றுமொருபுறத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் ஆகியவற்றின் அங்கீகாரமும் ஒத்துழைப்பும் சந்திரிகாவுக்குக் கிடைத்தன.

இக்காரணங்களால் அவர் தீர்க்கமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு சமாதானத்தை நிலைநாட்டுவார் என்ற நம்பிக்கை நிலவியது.

சமாதானத்திற்கான இறுதிவாய்ப்பென சந்திரிகா ஆட்சிக்கு வந்ததை ஒருசிலர் விமர்சனம் செய்தனர். இனவாதமற்ற சிங்களத் தலைவர் அல்லது தலைவி ஆட்சிக்கு வந்த ஒரேசந்தர்ப்பம் அதுவே எனவும் அது சமாதானத்தைக் கைவிட முடியாத சந்தர்ப்பம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இக் காரணத்தால் சந்திரிகாவின் அரசுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும் என்ற கருத்து வளர்ந்தது. அன்று இருந்த பலத்த எதிர்பார்ப்புகள் பகற்கனவாகி இறுதியில் பொ.ஐ.முன்னணி தோல்வியடைந்ததற்கும் இந்த நிபந்தனையற்ற ஒத்துழைப்புகள் சிலவேளை காரணமாக இருக்கக்கூடும்.

அவ்வளவுக்கு எதிர்பார்ப்புக்களை வளர்த்து ஆட்சிக்கு வந்த பொ.ஐ.முன்னணி அரசு அல்லது மிகவும் சரியாகக் கூறுவதாயின் சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையின் அரசியல் அனுபவங்கள் மற்றும் தலைவிதி ஆகியன குறித்து இன்று மீண்டும் மீண்டும் விவரிக்கத் தேவையில்லை. "கார்ள்மாக்ஸின்" ஒரு கூற்றின் மூலம் இதைத் தெளிவுபடுத்தலாம். "ஏதாவதொரு விடயம் காலப் போக்கில் அதற்கு எதிரான விடயமாக மாற்றமடையக்கூடும்" என்பதே கார்ள் மாக்ஸின் கூற்றாகும்.

சந்திரிகா அரசின் இறுதிக்காலத்தில் கையாண்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகள் - இனவாதப்போக்கு - செய்திஊடகங்கள் மீதான எதிர்ப்பு - வன்முறை அரசியல் - சண்டித்தன அரசியல் தந்திரங்கள் மற்றும் தேர்தல் மோசடிகள் ஆகிய அனைத்தும் கார்ள்மாக்ஸின் அந்தக் கூற்றையே நிரூபிக்கின்றன.

### இனவாதத்தை கக்காத ரணில்

சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்கு வந்தபோது இருந்த அனுகூலங்கள் அனைத்தும் ரணில் விக்கிரமசிங்க, ஆட்சிக்கு வந்தபோது இருக்கவில்லை. ரணில் எதிர்க்கட்சியில் இருந்தபோது இனவாதத்தைத் தூண்டும் பாரதூரமான நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளாத செயற்பாடு மாத்திரமே அவர் மதிக்கப்படுவதற்கு ஒரேயொரு காரணமாக இருந்தது.

அவர் இனவாதத்தில் முற்றாக மூழ்கவில்லை. ஒரு சில சந்தர்ப்பங்களில் ஒன்றுபட்ட இலங்கை பற்றிப் பேசும்போது அவர் இனவாதிகள் பக்கம் சாய்கிறாரோ என்பதுபோலத் தோன்றும். இருப்பினும் தனது கட்சியானது தமிழ்மக்களுக்கு எதிரான கட்சி என்ற பெயர் எடுக்காத விதத்தில் அவர் நடந்துகொண்டார்.

அதன் பிரதிபலனாக ஆட்சிக்கு வரும்வேளையில் தமிழ்க் கட்சிகளின கூட்டமைப்பினதும் முஸ்லிம் காங்கிரஸினதும் ஒத்துழைப்பு அவருக்கு கிடைத்தது.

அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது பற்றிய எண்ணம் - ஒன்றிணைந்த அரசுசார்பான கருத்து ஆகியன தொடர்பாக 1994இல் சந்திரிகா ஆட்சிக்கு வந்தபோது நிலவியது போன்று ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தபோது நிலவவில்லை.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண்பேன் என மட்டுமே அவர் கூறினார். ரணிலின் இந்தக் கருத்து மக்களிடையே அதிக நம்பிக்கையையோ அல்லது உணர்வுகளையோ ஏற்படுத்தவில்லை. நடப்பதைப் பார்த்துக்கொண்டிருப்போம் என்ற எண்ணமே மக்கள் மனதில் வளர்ந்தது. இது சந்திரிகா ஆட்சிக்கு வந்தபோதிருந்த நிலைவரத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

### இன்றைய முக்கிய அரசியல் சர்ச்சை

பலத்த எதிர்பார்ப்புகளுடனும் ஆதரவுடனும் ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசினால் உருவாக்க முடியாத சமாதானத்தை அவ்வாறான எதிர்பார்ப்புகள் மற்றும் ஆதரவின்றி ஆட்சிக்குவந்த ரணிலின் அரசினால் உருவாக்க முடியுமா? என்பதே இன்று விமர்சிக்கப்படும் முக்கிய அரசியல் சர்ச்சையாகும்.

சிலவேளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு பலவீனம் போன்று தோற்றமளிக்கும் விடயம் சமாதானத்திற்கான பேச்சுக்களின்போது அவருக்கு பலமானதாக பரிணமிக்க வாய்ப்பு ஏற்படவும்கூடும்.

விடுதலைப் புலிகளும், அவரது அரசும் பேச்சுக்களுக்குச் செல்வது முன்நிபந்தனைகள் இன்றியே ஆகும். இறுதித் தீர்வினைக் காணக்கூடிய திட்டமேதும் அவரது கைகளில் இல்லை. இதன் காரணமாக ரணிலுக்கு பேச்சுக்களின்போது தனது நிலைப்பாட்டைப் பொருத்தமான விதத்தில் முன்வைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. பிரதிவாதிகளுக்கு தனது நிலைப்பாட்டை உரியமுறையில முன்வைக்க ரணிலுக்கு அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன.

### சுப சகுனம்

சமாதான நடைமுறைகள் நடைமுறைச் சாத்தியமாக அமையும் என்பதை அவரது நடவடிக்கைகள் காட்டுகின்றன. சமாதான முயற்சிகளில் எதுவித பின்னடைவுகள் ஏற்படினும் அவற்றை எதிர்கொண்டு வெற்றிபெற வேண்டும் என அவர் ஆரம்பத்திலேயே தெரிவித்துவிட்டார். இது நல்லதொரு சுப சகுனமாகும். 1995 இல் பேச்சுக்கள் முறிவடைந்த கையோடு யுத்தம் மீண்டும் வெடித்தது. அவ்வாறான நிலைமை உருவாகாமல் தடுப்பதற்கு ரணில் எடுத்துள்ள முடிவு மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

மறுபுறத்தில் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்று வரை அவரது நடவடிக்கைகள் மெதுவானதாகவும் சீரானதாகவும் அமைந்துள்ளன. நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் விடயத்தில் அரச வெற்றி கண்டுள்ளது என நோர்வே பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். மெதுவான ஆனால் நிலையான ரணிலின் நகர்வுகளே இதற்குக் காரணமாகும்.

### அவசர செயற்பாடு ரணிலிடம் இல்லை

அவசரமான செயற்பாடுகள் அவரிடமில்லை. இதனால் சமாதான முயற்சிகள் ஒரு ஸ்திரமான நிலையை நோக்கிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. இதன்மூலம் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வாய்ப்புகள் அதிகரித்து வருவதை இதுவரையான அனுபவங்கள் காட்டுகின்றன.

எவ்வாறாயினும் சமாதான நடவடிக்கைகளின்போது ரணிலின் வெற்றிக்கான காரணிகளில் பல அவரது தனிப்பட்ட அல்லது அரசியல் அல்லது அவரது கட்சியின் ஆற்றல் ஆகியனவற்றில் தங்கியிருக்கப் போவதில்லை. வெற்றிக்கான சாதகமான காரணிகளாக அமையப்போவது யுத்தத்தின் தற்போதைய நிலைமையும் அரசியல் தேவையுமே ஆகும்.

சமாதானம் என்பது தொடர்ந்து குறிக்கோளாக இருந்த நிலைமை மாறி இன்றியமையாத தேவை என்ற நிலைக்கு வந்திருப்பதை நன்கு அவதானிக்கும்போது அறியமுடிகிறது. இதை உறுதிப்படுத்தும் சாதகமான நிலைமைகள் பல உள்ளன.

யுத்தத்தின்மீது இரு தரப்பினரும் கொண்டிருந்த ஆர்வம் இழக்கப்பட்டுள்ளதை முதலாவது காரணியாகக் கூறலாம். இதைப் பின்வருமாறு ஆராயலாம்.

ஒரு புறத்தில் விடுதலைப் புலிகளுக்கு தங்கள் குறிக்கோளான தனிநாட்டை யுத்தத்தின் மூலம் வென்றெடுக்கும் வாய்ப்புக்கள் இல்லை. மறுபுறத்தில் விடுதலைப் புலிகளை யுத்த ரீதியாகத் தோற்கடித்து வடக்கு - கிழக்கில் ஸ்ரீலங்கா அரசின் ஸ்திரமான நிர்வாகத்தை உருவாக்கக்கூடிய ஆற்றல் அரச படைகளிடம் இல்லை.

### இருதரப்புக்கும் ஆளணிப் பற்றாக்குறை

யுத்தத்தில் இவ்வாறான நிலைமைக்குப் பின்னணியான காரணங்கள் பலம்மிக்கவை. அதாவது யுத்தத்தின்மீது மக்கள் விருப்பத்தை இழந்துள்ளமை அல்லது யுத்தத்தைத் தொடர மக்கள் முன்வராமை. இந்த நிலைமை இரு தரப்பாருக்கும் பொருந்துகிறது.

வன்னிப்பிரதேசத்தைக் கைப்பற்றி நிர்வகிக்கத் தேவையான ஆளணி இல்லை என அரச படைகள் தெரிவித்தன. அதற்காக ஆளணி யைத்திரட்டும் முயற்சிகளும் பயனளிக்கவில்லை. அதுபோதாதென்று ஏற்கனவே படைகளில் இருந்து ஆயிரக்கணக்கில் சிப்பாய்கள் தப்பியோடிவிட்டனர்.

இந்த நிலைமை விடுதலைப் புலிகளுக்கும் பொருந்தும். அந்த அமைப்பிற்கும் ஆளணிப் பற்றாக்குறை ஒரு பிரச்சினையாகும். எனவே கட்டாயமாக ஆள்களைச் சேர்க்கும் முயற்சியில் அந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது. அவர்களது இந்தச் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு உருவாகியுள்ளது. இந்நிலையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளைக் கைப்பற்றி நிர்வகிக்கும் அவர்களது எதிர்பார்ப்பு முடியாத ஒரு விடயமாகும்.

### தீர்வுக்கு 77 வித மக்கள் ஆதரவு

இந்த நிலைமைகள் ஒரு விடயத்தை உறுதிப்படுத்துகின்றன. அதாவது யுத்த ரீதியான தீர்வு என்ற எதிர்பார்ப்பு இரு தரப்பிலும் பலவீனமடைந்துள்ளது. இதன்காரணமாக பேச்சுக்கள் மூலமாகத் தீர்வுகாணும் விடயத்திற்கு ஒத்துழைப்பு அதிகரித்து வருகிறது. மக்கள் கருத்துக் கணிப்புகளுக்கு அமைய பேச்சுக்களின் மூலம் தீர்வுகாணப் படுவதை 77 சதவீதமான மக்கள் ஆதரிக்கின்றனர்.

சமாதானம் தொடர்பான இந்த எதிர்பார்ப்புக்களை சமூகத்திலுள்ள பல சக்திகளும் வெளிப்படுத்துகின்றன. இதுதொடர்பான தெளிவான - தீர்க்கமான முன்னேற்றம் என்னவெனில் இந்த நாட்டை ஆளும் முதலாளி வர்க்கத்தினர் சமாதானம் தொடர்பாக ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பதேயாகும்.

இந்த வர்க்கத்தினர் இருகூறாக இருவேறு சந்தர்ப்பங்களில் தங்கள் நிலைமையை வெளிப்படுத்தியுள்ளனர். இதில் ஒன்று வர்த்தகப் பிரமுகர்கள் பேச்சுக்கள்மூலம் சமாதானத்தை உருவாக்க எடுத்த முயற்சிகள். மற்றைய நிகழ்வு வர்த்தகப் பிரமுகர் குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்ட சமாதானத்திற்காக நாடு தழுவிய ரீதியில் கைகோர்க்கும் நிகழ்வாகும்.

இவ்வாறு நாட்டின் ஆளும் வர்க்கம் சமாதானத்திற்காக முன்வந்து உழைப்பதானது மிக முக்கியமான முன்னேற்றமாகும்.

### சமாதானத்தில் பலரும் அக்கறை

கலைஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள், தொழில் வல்லுநர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற ஏனைய சமூக சக்திகள் ஆகியன குறித்து நோக்குகையில் அவையும் சமாதானம் குறித்து இன்று அதிக அக்கறை காட்டுவதை அவதானிக்க முடிகிறது. இந்த நிலைமையானது இதுவரை காணப்படாத முன்னேற்றமாகும்.

ஊடகத்துறையைப் பொறுத்தவரையில் பெரும் முன்னேற்றம் காணப்படுகிறது. 1980, 1990 ஆண்டு காலகட்டங்களில் ஊடகத்துறையில் நிலவிய நிலை இன்று முற்றிலும் மாற்றமடைந்துள்ளது.

தமிழ் மக்களை எடுத்துக்கொண்டால் நிலைமைகள் சகல விதத்திலும் மேற்குறிப்பிட்ட முன்னேற்றங்களை ஒத்தனவாகவே உள்ளன.

### முறுகல் நிலை தணிவு

இவ்வாறான நிலைமைகள் காரணமாக முக்கியமான இரு இனங்களுக்கிடையே முறுகல்நிலை குறிப்பிடத்தக்களவிற்குத் தணிந்து வருவதைக் காணமுடிகிறது. இதைக் கீழ்வருமாறு விவரிக்கலாம். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் கொழும்பிலுள்ள சிங்கள அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இராணுவத்திற்குமிடையில் யுத்தம் இடம்பெற்ற வேளையில் தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு இடையில் வெறுப்பு நிலவியது. ஆனால் இன்று சமாதானம் குறித்த நிலைப்பாட்டை அவதானிக்க முடிகிறது.

சமாதான நடவடிக்கைகள் வெற்றிபெற சாதகமாக உள்ள காரணிகள் குறித்து ஆராய்ந்தோம். சமாதான முயற்சிகளுக்கு எதிரான சக்திகள் மற்றும் அவற்றின் வளர்ச்சி குறித்து கவனத்தில்கொள்ளாது இருத்தலாகாது. குறிப்பாகப் போரில் ஈடுபட்டு உயிர்த்தியாகங்கள் புரிந்த விடுதலைப் புலி வீரர்களைப் போலவே போரில் மடிந்த படைவீரர்களின் எதிர்பார்ப்புகளை மறந்துவிடுவது அவ்வளவு சுலபமான விடயமல்ல.


அதேபோலவே ஜே.வி.பி. போன்ற சக்திகளும் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன. பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த மங்கள சமரவீர உருவாக்கிய யானை - புலி என்ற கற்பனை ஒப்பந்தம் குறித்து அந்த முன்னணி தொடர்ந்து கருத்துக்களை வெளியிடும் அளவுக்கு உள்ளது.

**தமிழில் : கஜனி**

அதேபோலவே அரசியல் முன்னேற்றங்களை புரிந்துகொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை என்பது தெளிவாகிறது. கடந்த பொதுத்தேர்தலின் போது ஜே.வி.பிக்கு ஒத்துழைப்பை வழங்கிய சில சக்திகளைக் கூட துரதிஷ்டவசமாக அந்தக் கட்சியினர் சமாதான விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்திவருவது நாட்டுக்கு கேடுவிளைவிக்கும் கொள்கையினைப் பின்பற்றுவதாக அமைகிறது. இதுவும் சமாதான முயற்சிகள் எதிர்நோக்கும் சவால்களில் ஒன்றாகும். இருப்பினும் தேவை உருவாகுமேயானால் தீர்வினைக் கண்டறிவது கடினமான காரியம் அல்ல.

இதற்கிடையில் மற்றொரு விடயம் குறித்துக் கவனம் செலுத்தப்படவேண்டும். சந்தர்ப்பம் எவ்வளவுக்கு வலுவானதாக இருப்பினும் அதன்மூலம் பயனைப் பெறுவதற்கு திறமையும் அர்ப்பணிப்பும் மிகவும் அத்தியாவசியமானதாகும். அதேபோலவே அவை மிகக் கவனமாக - நுணுக்கமாக - மேற்கொள்ளப்பட வேண்டும்.

சமாதான நடவடிக்கை தொடர்பான பாரதூரமானபொறுப்பு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசையே சார்ந்துள்ளது. அந்தப் பொறுப்பை அவர் நிறைவேற்ற முடியாதுபோனால் அல்லது கவனத்தில் கொள்ளாதுபோனால் நேற்று சந்திரிகா அரசுக்கு ஏற்பட்ட கதியே நாளை ரணிலின் அரசுக்கும் ஏற்படலாம்.☆



# வட பிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி (ஓட்டோ) சேவைச் சங்கம்

# North Ceylon Three Wheelers Association

40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

# புதிய கட்டடத் திறப்பு விழா

40, Muneeswaran Road, Jaffna.

## அருளாசிச் செய்தி

*அன்பு நெஞ்சத்தீர்!*

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி (ஓட்டோ) சேவைச்சங்கத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட இக் கட்டடத்தை இன்று திறந்துவைப்பதையிட்டு பெரு மன மகிழ்ச்சியடைகின்றோம். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்னும் பண்பாட்டுக்கமைய மக்களுடைய சேவையை தார்மீகப் பொறுப்பாக உணர்ந்து, அவர் அவர்களுக்கு உரிய இடங்களுக்குச் செல்வதற்கும் சென்றவர்தம் கடமையை நிறைவாகச் செய்வதற்கும் ஓட்டோ முச்சக்கரவண்டி மூலமாக சாரதிகள் ஒவ்வொருவரும் பாராட்டுக்குரியவர்கள். சொந்தச் சுகங்களைக் கருதாமல், எந்நேரமும் மக்களுடைய தேவையை உணர்ந்து செயற்படுபவர்களே முச்சக்கரவண்டி ஓட்டுநர்களாவர். இவர்களினுடைய சேவை இன்று முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதனை ஒவ்வொருவரும் மனதிற்கொண்டு பணியாற்றுவார்களாக. இன்று திறக்கப்படும் கட்டடத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, அனைத்து முச்சக்கரவண்டி உறுப்பினர்களும் இச்சங்கத்தில் இணைந்து, மக்களுடைய சேவையை நிறைவாகச் செய்து சந்தோஷமான வாழ்வு வாழ இறைவனைப்பிரார்த்திக்கின்றோம். இவர்களுடைய பணிகளை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## வரலாறு கண்ட சங்கம்

1984ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் இற்றை நாள் வரை யாழ். குடாநாட்டு மக்களின் நலனையும், ஓட்டோ உரிமையாளர், சாரதிகளின் நலனையும் ஏனைய போக்குவரத்து சாதனங்களின் சேவை நலனையும் காத்து, ஒழுங்கான சேவையாற்றுவதை நோக்காகக் கொண்டு செயற்பட்டுவரும் இச்சங்கம், மேலும் சேவை கட்டமைப்புடன் சிறந்த சேவையாற்ற, தனக்கென நிலையான புதிய கட்டடத்தில் செயற்பட அனைத்து ஓட்டோ உரிமையாளர், சாரதிகளின் ஆதரவினை எதிர்நோக்கிய வண்ணம், இவர்களுக்குத் தாயாகி தனம் தர தாய்ச்சங்கமாகத் தன்னைப் பொலிவுற வைத்து நிற்கும் காட்சி...

*நன்றி*

- இங்ஙனம்
நிர்வாகம்
- ஓட்டோ சங்கம்.



## நிகழ்ச்சி நிரல்

*தலைவர்* : உயர்திரு.இ.மனோகரராசா அவர்கள்
*காலம்* : இன்று (16.02.2002) சனிக்கிழமை
*நேரம்* : காலை 9.00 மணி

*மங்கள விளக்கேற்றல்:*
**திரு.க.சண்முகநாதன்** - *பிரதம விருந்தினர்* (யாழ். அரச அதிபர்)
**திரு.செ.கந்தையன்** - *சிறப்பு விருந்தினர்* (யாழ்.மாநகர முதல்வர்)
**திரு.பொ.தியாகலிங்கம்** - *சங்க நிர்வாகச் செயலாளர்*

*ஆசியுரை:* **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.**

*புதிய கட்டடம் திறந்து வைத்தல்:*
**திரு.க.மணிபல்லவராஜன்**
(நல்லூர் பிரதேச சபைத் தலைவர், ஈ.பி.டி.பி. யாழ்.உதவி அமைப்பாளர்)

*வரவேற்புரை:* திரு எஸ்.பரமராசா (லிகிதர் - ஓட்டோ சங்கம்)
*நன்றியுரை:* திரு.செ.யோகநாதன் (பொருளாளர்)
~ மற்றும் பலர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*- நிர்வாகம்*
*ஓட்டோ சங்கம்,*
*யாழ்ப்பாணம்.*

## உண்மை, அயராத உழைப்பே சேவை

தொழில் முயற்சிகள் என்பது அது எந்தத் துறை சார்ந்ததாக இருந்தாலும் வெறுமனே பணம் சம்பாதிப்பது, பைகளிலும் பெட்டிகளிலும் பொருள் குவிப்பதற்காக என்று கருதப்படலாகாது. தொழில் முயற்சிகளில் ஈடுபடும் ஒவ்வொரு தனி மனிதனும், தானும் தன்னைச் சார்ந்தவர்களும் பிறர் தயவை எதிர்பாராது சுயகௌரவத்துடனும் தன்மானத்துடனும் வாழ்வதற்காக எடுக்கும் உயரிய முயற்சி என்பதுடன், அதற்காக மனித சமூகத்தின் ஏதோ ஒரு தேவையை நிறைவுசெய்துதான் அவன் தன் முயற்சியால் வெற்றிகொள்ள முடிகிறது. இந்த வகையில் பொருள் தேடுவதற்கான நியாயமான அனைத்து முயற்சிகளும் மனித சமூகத்திற்கு ஒவ்வொரு தனிமனிதனும் தன் பங்கிற்கு அளித்திடும் அர்ப்பணிப்பும் சேவையுமாகும். எனவே எந்தத் தொழில் முயற்சிகளிலும் உண்மை, நேர்மை, நம்பகத்தன்மை, சேவை மனப்பாங்கு சேருமிடத்து அந்தத் தொழில் சிறப்படைகிறது. உயரிய இறைவனது ஆசிக்கும் அருளுக்கும் உள்ளாகிறது. அதனைச் செய்வோர் உயர்வடைகிறார்கள்.

இந்த வகையில் யாழ்.ஓட்டோ ஓட்டுநர்கள் தாம் ஒன்றிணைந்துள்ள சங்கத்தினூடாக மக்களுக்குத் தமது சேவையை வழங்கி வருகிறார்கள். நெருக்கடிமிக்க பல்வேறு காலகட்டங்களில் கூட மக்களின் போக்குவரத்து தேவையில் கணிசமான பங்களிப்பைச் சேவை மனப்பான்மையுடன் செய்து வருகிறார்கள்.

இன்று அவர்கள் தமது சங்கத்திற்காக புதிய கட்டடம் ஒன்றை வாங்கித் திறப்புவிழா செய்வதானது அவர்களது அயராத உழைப்பு, உண்மை, நேர்மை, சேவை நயத்தின் உயர்ந்த சன்மானம் என நினைக்கின்றேன். இந்த வேளையில் ஓட்டோ சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் வாழ்த்தி ஆசி கூறுகின்றேன் அல்லாவின் அனைத்து அருளும் உண்டாவதாக! ஆமீன்.

மௌலவி: F.M.முஹிய்யத்தீன்,
பெரியகடை ஜிம் ஆ பள்ளி,
யாழ்ப்பாணம்.

| | |
|---|---|
| *புத்திஜீவிகளின் அமுத சுரபி* **பூபாலசிங்கம் புத்தகசாலை**<br>இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | **கஜன் சிறீராம் மிக்சர்**<br>இல.07, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். |
| **யாழ்.சொப்பிங் சென்ரர் அன்ட் யாழ். தொலைத்தொடர்பு நிலையம்**<br>இல.442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | **சம்பந்தர் வயோதிபர் பராமரிப்பு நிலையம்**<br>இல.60, அரசடி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2448 |
| **இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**<br>இல.50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **றோயல் கோப்பி சென்ரர்**<br>இல.10, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். உரிமையாளர்: மா.இராசதுரை |
| **சிற்றி மெடிக்கல்**<br>இல.487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | **சிறி நதியா நகை மாளிகை**<br>இல.01, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதிச் சந்தி, யாழ்ப்பாணம். |
| **குலம் கிறீம் ஹவுஸ்**<br>இல.226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | **எரிக்கணேஸ்** பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி அகம்<br>இல.564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| **சியானாஸ் ரெக்ஸ்ரைல்ஸ் அன் ரெயிலறிங்**<br>இல.77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2967 | **ஸ்ரீதரன் விளையாட்டுக்கழகம் (லிக்கர் பார்)**<br>அரசடி வீதி, நல்லூர். உரிமையாளர்: சந்திரேஸ்வரன் (வவா) |

(C/20768)

*சிவமயம்*

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் தை மாதம் 25ஆம் நாள் (07.02.2002) வியாழக்கிழமை முருகனடி சேர்ந்த

**பிரம்மஸ்ரீ செந்தில்நாதஐயர் - தியாகராஜ சர்மா**
(மல்லாகம் கோட்டைக்காடு சாளையம்பதி முருகன் தேவஸ்தான பிரதமகுரு)

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**இன்று (16.02.2002) சனிக்கிழமை பகல் 10மணி தசாகம்**

**19.02.2002 செவ்வாய்க்கிழமை பகல் 12மணி கிருஹயக்ஞம்**

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி முருகனடி சேர்ந்த அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

பிரம்மஸ்ரீ செ.ரவிச்சந்திரக்குருக்கள்,
செ.சுகுமாரசர்மா (சகோதரர்கள்)

(763)

## ஜெகன் போட்டோ

**IIS** இன் 6ஆவது நிறுவனதின விழாவில் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் எடுத்த புகைப்படங்களை உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்.

**ஜெகன் போட்டோ,**
*399, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
***T.P.:3552***

(767)

### மருத்துவர் குழு மானிப்பாய்க்கு விஜயம்

மானிப்பாய்,பெப்.16

யாழ்வந்துள்ள வெளிநாட்டு வைத்திய நிபுணர் குழு இன்று மானிப்பாய் கிறீன் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொள்கின்றது. அங்கு கண்பார்வை குறைந்த 50 பேருக்கு கண்ணாடிகளை அக்குழு வழங்கவிருக்கின்றது.(ஜ-90)

### கலந்துரையாடல்

த.வி.கூட்டணியின் ஆதரவாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு கூட்டணியின் யாழ். தலைமைக் காரியாலயத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-180)

### கூட்டம்

யாழ்.மாவட்ட முன்பள்ளிகள் சமாசத்தின் விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு கச்சேரியடியில் உள்ள சோமசுந்தரம் முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 15 பிரிவுகளின் தலைவர்களையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார்.(3-10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
29 . 10 . 1942



உதிர்வு
17 . 01 . 2002

## அமரர் மாணிக்கம் தம்பையா

*அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாகத் திகழ்ந்தவரே!*
*அருமை அப்பாவே! ஆத்மா சாந்தி அடையப்பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி!*

**இன்று (16.02.2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, நண்பகல் மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*பொன்னையா லேன்,*
*ஆனைக்கோட்டை.*

(C/20771)

குடும்பத்தினர்.

SRI VENGADA GEM'S & JEWELLERY

மீண்டும் புதியதோர் அறிமுகம்

தரமான சர்வதேச (ISO) நிர்ணயிக்கப்பட்ட கற்களை இலங்கை எங்கும் விநியோகித்து வரும் SRI VENGADA GEM ஸ்தாபனத்தார் 22-02-2002 இல் EURO COMPANYயின் தரமான வெளியீடான RUBY CORUNDUM சிவப்பு கற்களை எமது அனைத்து வாடிக்கையாளருக்கும் அறிமுகப்படுத்துவதுடன் இலங்கையில் உள்ள சகல முகவர்கள் மூலமும் விநியோகிக்கத் திட்டமிட்டிருக்கின்றோம். இது சம்பந்தமான சகல விவரங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

★ 01.01.2002இன் விளம்பரத்தின்படி இறக்குமதி செய்யப்பட்ட தரமான முத்துக்கள் மொத்த விலைக்கு விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன. மற்றும் SIGNITY SWISS உற்பத்திகளை COMPANY PACKETகளில் மட்டுமே கொள்வனவு செய்யுங்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

*MODEL PACKET*

*Authorized Dealers*
SRI VENGADA GEM'S & JEWELLERY
108/ 2/2, Sea Street Colombo 11
Tel: 472881, 526873 Fax:522396

EURO
FAVORITE
G DLES POLISHED
MACHING CUTTING
RUBY CORUNDUM

| SIZE | | SHAPE |
|---|---|---|
| 2.00m.m | 1000 | ROUND |

*தலைமை அலுவலகம்:*
No.108 - 2/2,
செட்டியார் தெரு,
கொழும்பு.

*கிளை:*
No.299 OR 301,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(757)

**வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்களப் போதனாசிரியர்கள் பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2001**

**விண்ணப்ப முடிவு திகதி 25.02.2002வரை நீடிப்பு**

மேற்படி பதவிக்கான விளம்பரம் 1219ஆம் இலக்கம் 2002ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகுதி (IV) (அ) மாகாண சபைகள் என்ற இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிவித்தலில் விண்ணப்ப முடிவு திகதி 2002.01.28ஆம் திகதி என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் விண்ணப்ப முடிவுதிகதி 25.02.2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ் வர்த்தமானிப் பத்திரிகைகளை வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் திணைக்களங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

(C/10775)

**கரிதாஸ் இலங்கை - செடேக் கொழும்பு நிறுவனங்களின் அனுசரணையுடன் யாழ்.மனித முன்னேற்ற நிலையம் அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய**

## மனித உரிமைக் கட்டுரைப்போட்டி முடிவுகள்

*2ஆவது பரிசு:-* சாளினி சிவதாஸ்
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

*3ஆவது பரிசு:* அமிர்தசுலோச்னா சுந்தரலிங்கம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

**பாராட்டுப் பரிசில்கள் பெறுவோர்**

☆ நடராசா தவச்செல்வம்
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.

☆ ரோசானி வீரராஜன்
யா/திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.

☆ யே.அனர்ந் றமணி
சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சாங்கானை.

*இயக்குநர்*
மனித முன்னேற்ற நிலையம்,
(கியூடெக்)
*யாழ்ப்பாணம்.*

(766)



நாகம்மாஸ் சுன்னாகம்
இன்றுமுதல் குதூகல ஆரம்பம்
விஜயகாந் (இருவேடம்)
சௌந்தர்யா, வடிவேல் வடிவுக்கரசி நடித்த
தவசி
(7760)
*காட்சிகள்:*
*11.00, 3.00 (புதிய நேரம்)*

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்.பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் அரச இயந்திர சாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலையில் 2000/2001 ஆம் ஆண்டில் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் உள்ள பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கேட்டுள்ளார். (ஐ-7)

## மாணவர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம்,பெப்.16

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தை மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதால், அங்கு கற்க விரும்பும் மாணவர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் பாடசாலையில் தமது பெயர் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

(ஐ-7)

## சமய சந்நிதி

வலி.தெற்கு,பெப்.16

சுன்னாகம் வருஷப்புலம் அருள்மிகு மகாமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.
(க152)

## மக்கள் வங்கிக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

மக்கள் வங்கியில் வங்கி உதவியாளர் பயிலுநர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களில் 9 பேரை இன்று காலை 10.30 மணிக்கு பிராந்திய அலுவலகத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

★செல்வி ஆர்.இரத்தினசிங்கம் - 56, பலாலி வீதி, கந்தர்மடம்.

★செல்வி டி.குணரத்தினம் - குளங்கரை லேன், கொக்குவில் கிழக்கு.

★செல்வி ஜே.எஸ்.பெனடிக்ற் - 50/1, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

★எஸ்.கஜேலன் - 74, அரசடிவீதி, யாழ்ப்பாணம்.

★செல்வி கே.சின்னத்தம்பி - 'ராஜ் பவான்', கரணவாய் கிழக்கு.

★செல்வி கே.தில்லையம்பலம் - மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

★செல்வி எஸ்.சிவசர்மா - செல்வநாயகம் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு.

★செல்வி ஆர்.தர்மசோதி - 'சிறிசாலினி' கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

★செல்வி கே.சயந்தி - சண்முகா பவனம், இணுவில் மேற்கு. (க-3)

## வன்னிப் பகுதி ஆசிரியர்கள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.16

தற்காலிக இணைப்புப் பெற்று யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றிவரும் வன்னிப் பகுதி ஆசிரியர்கள் அனைவரையும் நாளைமறுதினம் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு, வருகை தருமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(க-10)

நிர்மலா சாங்கானை
முரளி, தேவயானி, ரம்பா நடித்த
ஆனந்தம்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30
(C/20572)

ராஜா யாழ்ப்பாணம்
நாளை மட்டும்
அஜித், ஜோதிகா, விவேக் நடித்த
பூவெல்லாம் உன் வாசம்
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5 (பு.நே.)
(C/20571)

## கண்ணீர் அஞ்சலி

எமது கடற்றொழில் திணைக்கள சக உத்தியோகத்தர்
**திரு.ந.கணேசமூர்த்தி** (கடற்றொழில் பரிசோதகர்)
அவர்களின் அன்புத் தந்தையார் **முருகேசு நடராசா**
அவர்கள் 15.02.2002 இல் காலமாகியதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(761)

# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை கந்தையா (பப்பா)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கந்தையா (பப்பா) 13-02-2002 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயகாந்தன், அருட்காந்தினி, விஷ்ணுகாந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-02-2002) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பழைய வீதி, வண்ணார் பண்ணையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய வீதி,*
*வண்ணார் பண்ணை,*
*ஆனைக்கோட்டை.* (771)

*தகவல்:*
த.பொன்னம்பலம் (தமையன்)
க.விஜயகாந்தன் (மகன்)

## சுப்பன் அப்புத்துரை (விதானை)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் அப்புத்துரை நேற்று (15-02-2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பன் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், தங்கரத்தினத்தின் பாசமிகு கணவரும், அகிலன் (சுவிஸ்), அகல்யா (சுவிஸ்), அனிமொழி (முதலாம் வருட முகாமைத்துவத்துறை மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரனின் (சுவிஸ்) அன்பு மாமனாரும் சரஸ்வதி (லண்டன்) மற்றும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை,லட்சுமி, மகேஸ்வரி, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணரத்தினம், இரத்தினபாக்கியம், நாகம்மா ஆகியோரின் மைத்துனரும், நவரத்தினம், திருச்செல்வம் ஆகியோரின் சகலனும், கனகரத்தினத்தின் மாமனாரும், நிக்சனின் (உரும்பிராய் இந்துக் கல்லூரி) பெரியப்பாவும், சண்முகலிங்கத்தின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-02-2002) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் எருளல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகப் பிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (769)

*தகவல்:*
பூ.நவரத்தினம் (காந்தி)
*(சகலன்)*

## வைரமுத்து முதலித்தம்பி (கந்தையா)

*(ஓய்வுபெற்ற விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்)*

அளவெட்டி வடக்கு, செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து முதலித்தம்பி நேற்று (15-02-2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - பொன்னமா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சுந்தரேசன் (இந்தியா), சுரேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி சிவசித்திரலீலா சுந்தரேசன், திருமதி விமலயோகினி சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தாமிரா, கௌதமன், அபிலாஸ், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி தங்கம்மா சுப்பிரமணியம், செல்லப்பயா, காலஞ்சென்ற செல்லம்மா கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி பொ.நல்லம்மா, காலஞ் சென்ற சுப்பிரமணியம் (லேக்ஹவுஸ், கொழும்பு), செல்லத்துரை மற்றும நடராசா, கார்த்திகேசு (சுவிஸ்), பத்மாவதி, சிவபாககியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலி வடக்கு கலாசாலை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (16-02-2002) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*திருநெல்வேலி.* (771)

*தகவல்:*
சு.மனோகரன்
(மருமகன்)

## சோமசுந்தரம் சுகந்தன்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சுகந்தன் நேற்று (15-02-2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - மனோன்மணி தம்பதியினரின் பாசமிகு மகனும், வசந்தினி, சாந்தினி, ஈழநேசன் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் - Lanka cement LTD), இந்திரதாஸ் (swiss) ஆகியோரின் அன்புச் சகோதரரும், புனிதகுமாரி (ஆசிரியர் யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி, தற்பொழுது யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) உஷா (swiss) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சேயோன், வித்தகி ஆகியோரின் அன்புச் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-02-2002) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை உபதபாற்கந்தோர் அருகில்,*
*சுதுமலை சந்தி,*
*மானிப்பாய்.* (771)

*தகவல்:*
சோ.ஈழநேசன்
(சகோதரன்)

# பேச்சுக்களை முன்னெடுத்துச்செல்ல நிரந்தர யுத்தநிறுத்தம் அவசியம்

## சிங்கப்பூரில் பிரதமர் தெரிவிப்பு

சிங்கப்பூர்,பெப்.16

நிரந்தர யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் சமாதானப் பேச்சுக்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

- இவ்வாறு நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று அங்கு இடம்பெற்ற வர்த்தகப் பிரமுகர்களுடனான சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் சமாதானம் ஏற்படவேண்டும். நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மக்களின் மனிதாபிமான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் அரசு விசேட கவனம் செலுத்தி வருகின்றது. இதன் முதல் நடவடிக்கையாக வன்னிப் பகுதிக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச்செல்வது தொடர்பாக இதுவரை நிலவிவந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

யுத்தத்துக்கு முடிவு கட்டப்பட்டதும் இதுவரை காலமும் யுத்தநிறுத்தத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த பெரும் தொகை நிதியை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தமுடியும்.

- இவ்வாறு பிரதமர் தெரிவித்தார். (ஐ-7)

# மாணவன் திவ்வியன் நேற்று பரீட்சைக்குத் தோற்றினார்

யாழ்ப்பாணம்,பெப்.16

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட 3ஆம் வருட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் நேற்று பொலீஸார் மற்றும் சிறைச்சாலை அலுவலர்களின் பாதுகாப்புடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் புள்ளிவிரைவியல் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றினார்.

நேற்றுக் காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை நடைபெற்ற இப்பரீட்சைக்குத் தோற்றிய பின்பு யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் மதியஉணவு அருந்த அவர் அனுமதிக்கப்பட்டார். மீண்டும் பொலீஸாரின் பாதுகாப்புடன் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதேவேளை -

அடுத்த மாதம் 25ஆம் திகதி பிரயோககணிதம் முதற்பகுதி, 30ஆம் திகதி பிரயோககணிதம் இரண்டாம் பகுதி ஆகிய பரீட்சைகள் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சையில் மாணவன் திவ்வியன் தோற்றவேண்டியுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-180)

# காரைதீவில் நேற்று ஹர்த்தால் கிழக்கில் வன்முறைக்குத் தூபம்!

## வதந்திகளால் பதற்றம்

மட்டக்களப்பு,பெப்.16

அக்கரைப்பற்று ஆலங்குளம் பகுதியில் வைத்து தமிழ்ப் பெண் ஒருவர் ஓட்டோ சாரதி உட்பட ஐவரால் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து நேற்று காரைதீவில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் மூடப்பட்டுக் கிடந்தன. கரையோரப் பிரதேசங்களுக்கான பஸ் போக்குவரத்தும் நடைபெறவில்லை. பாடசாலைகள் நேரகாலத்துடன் மூடப்பட்டு மாணவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வீதிகளின் மத்தியில் கற்கள் குவிக்கப்பட்டிருந்ததுடன் பாரிய மின்கம்பங்கள் வீதிக்குக் குறுக்காகப் போடப்பட்டிருந்தன.

இதேவேளை -

மேற்படி சம்பவத்தைக் கண்டித்து அககரைப் பற்று, திருக்கோயில் ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதை அடுத்து அங்கு பதற்றநிலை நிலவியது தெரிந்ததே.

கிழக்கில் தமிழ் மக்களுக்கும் முஸலிம்களுக்கும் இடையே வன்செயலகளைத் தூண்டிவிட சில சக்திகள் முயன்று வருவதாகக் கூறப்படுகிறது.

வீண் வதந்திகளை நம்பி பதற்றமடைய வேண்டாம் என்று பொது மக்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர். (ஐ-7)

### யாழ்ப்பாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும், அரசுத் தரப்புக்கும் இடையில் பரஸ்பர நல்லெண்ணச் சூழல் உருவாகும். இந்தச் சூழல் வடபகுதி மக்களுக்கு அதிகளவு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும்

சமாதான நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்கு முப்படையினரும்தமது பூரண ஆதரவினை வழங்குவர்.

வன்னிப் பகுதிக்கான போக்குவரத்து முழுமையாக ஆரம்பமாகியதும் வன்னியில் துரித அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (ஐ-7)

### பயண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து விமானத்திலோ கப்பலிலோ பயணம் செய்யமுடியும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரியான கேணல் ரத்னாயக்கா உதயனுக்குத் தெரிவித்தார்.

அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்து, பயணச்சீட்டுப் பெறும் புதிய நடைமுறை நேற்று மாலையே அமுலுக்கு வந்ததாக அவர் கூறினார்.

வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்வோர் இதுவரை காலமும் தத்தமது பிரிவு படையணி அலுவலகத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து 'கிளியரன்ஸ்' பெறவேண்டி இருந்தது.

இந்தக் கட்டுப்பாடுகள் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தபின்னர் - 1996 ஆம் ஆண்டு நடுப்பகுதி முதல் - அமுலில் இருந்து வந்தது. இந்தப் பாதுகாப்புக் கெடுபிடிகளால் குடாநாட்டு மக்கள் பெரும் சிரமங்களையும், அலைச்சல்களையும் அனுபவிக்க நேர்ந்தது.

நாட்டின் எந்தப் பகுதிக்குச் செல்வதற்கும் இலங்கைப் பிரஜைகள் எவரும் பாதுகாப்பு அனுமதி பெறத் தேவையில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் கடந்த 11 ஆம் திகதி அறிவித்திருந்தது. எனினும் அந்த நடைமுறை குடாநாட்டுக்கும் பொருந்துமா என்பதில் குழப்பநிலை நிலவி வந்தது.

பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பு வெளியான பிறகும் முந்திய நடைமுறையே கடந்த சில நாள்களாக இங்கு அமுலில் இருந்து வந்தது. நேற்றுமுதலே இந்த நடைமுறை நீக்கப்பட்டிருக்கிறது. (ஐ-3)



இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்துவரும் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள தமிழீழ போக்குவரத்துக் கழகத்தில் தரித்து நிற்கும் வாகனங்கள்.

(படம்:வவுனியா செய்தியாளர்)

# இடைக்கால நிர்வாகம் விரைவில் புலிகளிடம்

## அமைச்சர் மகேஸ்வரன் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.16

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் விரைவில் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தின் அமைச்சின் உப - அலுவலகத்தை நேற்று வைபரீதியாகத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

வடக்கு - கிழக்கில் சீரான நிர்வாகம் நடைபெறுவதை உறுதி செய்ய வசதியாக அந்த மாகாணத்தின் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இதனைச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது - என்று அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார். *(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)* (ஐ-3)

### கண்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியத்துவம் பெறும் நீண்ட படை நடவடிக்கை இடம்பெற்ற கண்டி நெடுஞ்சாலை தற்போது பொது மக்கள் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டிருப்பது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என்று அவதானிகள் வர்ணித்திருக்கின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வன்னிப் பெருநிலப் பரப்பை ஊடறுத்துச் செல்லும் கண்டி வீதியைக் கைப்பற்றுவதற்காக 1997 மே 13 ஆம் திகதி அரசுப் படைகள் 'ஜெயசிக்குறு' (வெற்றி உறுதி) என்ற பெரும் படை நடவடிக்கையை ஆரம்பித்திருந்தன.

பெரும் எண்ணிக்கையான படையினரின் உயிரிழப்புக்கும் உடைமையழிவுகளுக்கும் காரணமாக அமைந்த இந்தப் படைநடவடிக்கை சுமார் 18 மாத காலம் நீடித்தது.

ஒரு காலத்தில் அரச படைகளின 'மரண வாயில்' என்று கூறப்பட்டு வந்த ஏ-9 வீதி இன்று சமாதானத்தின் வாயிலாகத் திறக்கப்பட்டிருக்கிறது. (ஐ-3-9)

## ஐ.தே.கட்சியின் பேச்சாளராக கஜந்த

கொழும்பு,பெப்.16

ஐ.தே.கட்சியின் ஊடகத்துறைப் பேச்சாளராக கஜந்த கருணாதிலக நியமிக்கப்படவிருக்கின்றார்.

தற்சமயம் சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் இவரது நியமனம் அறிவிக்கப்படும்.

ஊடகத்துறைப் பேச்சாளராகப் பணியாற்றிய கருணாசேன கொடித்துவக்கு கல்வியமைச்சராகப் பதவியேற்றுள்ளதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்படுகின்றது. (ஐ-3)

### யாழ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கான பாதையைத் திறப்பது இப்போது அரசின் கைகளிலேயே இருக்கிறது - என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்றுப் பாதை திறக்கப்பட்டபோதும் விடுதலைப் புலிகளின் பகுதியில் இருந்து செய்தியாளர்கள் எவரும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வர அனுமதிக்கப்படவில்லை.

'புலிகளின் குரல்' வானொலி, 'ஈழநாதம்' பத்திரிகை ஆகியவற்றின் செய்தியாளர்கள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற வைபவங்கள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக அங்கு வர செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் மூலம் அனுமதி கோரினர். ஆனால் படையினர் அனுமதி வழங்கவில்லை. (ஐ-3-164)


**பனை அபிவிருத்திச் சபை**

*பனங்கூழ் பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி!*

இதுவரை காலமும் எமது பனம்பொருள் உற்பத்தி நிலையத்தில் புதன்கிழமை மட்டும் இடம்பெற்ற பனங்கூழ் விற்பனை இன்று சனிக்கிழமை முதல் வாரத்தில் இரு தினங்கள் இடம்பெறவுள்ளன.

புதன், சனி ஆகிய இரு தினங்களிலும் கூழைப் பருகி இன்புறுங்கள்.

மரக்கறிக் கூழ் - 20 ரூபா
மீன் கூழ் - 30 ரூபா

*5, சோமசுந்தரம் அவனியு, யாழ்ப்பாணம்.*

தலைவர்,
பனம் பொருள் அபிவிருத்திச்சபை.

(C/20770)



**இப்பொழுது விற்பனையாகின்றன!**

புது வருட (2002)

லீலா

பஞ்சாங்கக் கலண்டர்கள்
தினசரி நாள்காட்டி

அதிரடி விலைக் குறைப்பு 95/-

☆ கையடக்கமான பிளாஸ்ரிக் கவருடன் டயறிகள்
☆ கண்ணைக் கவரும் கவின் மிகு படங்களுடன்

தாமதமின்றி உடனே விரையுங்கள்!

உதயன்பணிமனை,
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

வியாபாரிகளுக்கு
20% த்திற்கு மேல் கழிவு வழங்கப்படும்.

(C/20768)



**விற்பனைக்கு**

வெளிவராத புதியபடப் போஸ்ரர்கள் உடன் விற்பனைக்கு உண்டு.

**வீடியோ சிந்து**

(C/20774) உரும்பிராய்.



**CHEMISTRY CENTER**

83, பலாலி வீதி, கந்தர்மடம்.

இணைந்த கணிதம்
**A/L 2004**
திரிகோண கணிதம்
Sat., Sun. 5 -6.30 p.m. (பி.நே)
இன்று ஆரம்பம் 16.02.2002

**2003 A/L**
நியூட்டனின் இயக்க விதிகள்
ஈருறுப்பு விரிவு
Sat., Sun. 3.15-5.00p.m.
ஆரம்பம் இன்று 16.02.2003

P.செந்தில்நாதன் (B.Sc.) (758)



**சுனில் ஆட்ஸ்**

305, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

10.02.2002 வரை ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

18.02.2002 அன்று படச்சுருள்கள் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்படும்.

எமது "அக்மி லாப்" (Acme Lab) வாடிக்கையாளர்களுக்கு பிரதி ஒவ்வொன்றும் 16/-படி வழங்கப்படும்.

NOTE:
1.வீடியோ கசட்டுக்கள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படும்.
2. CD இல் இருந்து CD க்கு பாடல்கள் பதிவு செய்துதர 250/-மட்டுமே.

(C/20773)



**நவீன கணனிகள் விற்பனையில்**



**Pentium 4 (1.6,1.7 GHz)**
**PentiumIII 933, 1000 MHz**

PRINTERS : EPSON LQ 300+ , EPSON LX 300+
HP 1200 LASER , HP 640C,
SCANNER : HP 3300, ACER UPS : APC 500VA

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS

IIS விற்பனைப் பிரிவு,
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
TP. No : 2831


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.